UNIVERSITY OF JAFFNA ... RECEIVED 1990-2-1 PERIODICALS DIVISION

''பொன் கொடுத்தும் காலத்தைவாங்கமுடியாது''

மில்க்வைற் சலவைப் பவுடர் சருமத்திற்கு தீங்கு இழைக்காது. அதன் அபரிமித நுரைவளம் துரிதமாக அழுக்கைப் போக்குகிறது.

50 வெற்றுப்பக்கெற் அனுப்பி ஒரு கைக் குட்டையைப் பெறுங்கள்.

மில்க்வைற்
யாழ்ப்பாணம்.
(ஏ-542)

விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 மாசி 06 றஜபு பிறை 21 இதழ் 05
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 18-02-1990

உனது நெஞ்சிற்குத் துரோகம் செய்யாதே. மனச்சாட்சியின்படி நட. நிச்சயமாகவே உனக்கு வெற்றி உண்டாகும்.
—பரமஹம்சர்

மில்க்வைற் சோப் மேலுறைகளிலிருந்து25திருக்குறள் அனுப்பி ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் ஸ்ரிக்கர் ஒன்று பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற்
யாழ்ப்பாணம்.
ஏ-542

## நெதர்லாந்தில் தமிழர் வீடுகளில் திடீர் சோதனை

(புலூன்சன்)

நெதர்லாந்தில் வாழும் இலங்கைத் தமிழ் அகதிகள் வசிக்கும் வீடுகளைத் தேடிப் பொலிஸார் சோதனை நடத்திவருவதாகத் தெரிய வந்துள்ளது.

நெதர்லாந்திலுள்ள புலூன்சனில் இத் தேடுதல் நடவடிக்கையின்போது சில தமிழர்கள் கைது செய்யப்பட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது

இதேவேளை, புகலிடம் கோரி விமான மார்க்கமாக அம்ஸ்ரடாம் சர்வதேச விமான நிலையத்தில் வந்து இறங்கும் இலங்கைத் தமிழர் மீது குடிவரவு அதிகாரிகள் மிகத் தீவிரமான போக்கைக் கடைப்பிடித்து வருகின்றனர்.

(8ம் பக்கம் பார்க்க)

### இலங்கை நிலைமை சீரடைவதால்

# சுவிஸ் தமிழ் அகதிகள் விரைவில் திருப்பி அனுப்பப்படுவார்கள்

(பொன்)

**சுவிஸில் பல்வேறு காரணங்களைக் காட்டி, புகலிடம் கோரி மனுச் செய்தவர்களில் சிலருக்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், பலர் நாடு கடத்தப்பட உள்ளதாகவும் அறியப்படுகிறது.**

இங்குள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் விடயத்தில் நாடு கடத்தும் பணி தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளபோதிலும்இலங்கைநிலைமை சீரடைந்துவருதினாலும் சுவிஸில் பாதுகாப்பு இன்மையாலும் இவர்கள் விரைவில் நாடு கடத்தப்படலாம் என்று கூறப்படுகிறது.

இதேவேளை சுவிஸில் அகதிகளாக புகலிடம் கோரி தஞ்சம் புகுந்துள்ள வேறு நாடுகளைச் சேர்ந்த மக்கள்மீது இங்குள்ள வாசிகள் வெறுப்பும், கோபமும்கொண்டுள்ளதுடன் இந்த அகதிகளுக்கு எதிராக இயக்கம் ஒன்றையும் ஆரம்பித்துள்ளனர்.

இந்த இயக்கம் இங்குள்ள அகதிகள்பலர்மீது தாக்குதல் நடத்தியுள்ளதுடன் அவர்களின் வீடுகளையும் எரித்துள்ளது

இதுவரை இவ்வாறான தாக்

(8ம் பக்கம் பார்க்க)

## திருமலையிலிருந்து அமைதிப்படை மார்ச் 10-ம் திகதி வெளியேறும்?

(திருமலை)

திருகோணமலை நகர் பகுதியில் தற்போது நிலைகொண்டுள்ள இந்திய அமைதிப்படையினர், அடுத்த மாதம் 10-ம் திகதியளவில் வெளியேறி விடுவார்கள் என இங்குள்ள நிலைமைகள் மூலம் தெரியவருகிறது.

திருமலை நகர்ப்புறத்தைத் தவிர்ந்த மற்றைய இடங்களி

(8ம் பக்கம் பார்க்க)

## கைதான தமிழ் இளைஞர்கள் உடுப்பிட்டியில் மேலும் 87 பேர் விடுதலை

(பருத்தித்துறை)

இந்திய அமைதி காக்கும் படையினரால் கைதுசெய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டிருந்த 87 இளைஞர்கள் நேற்று சனிக்கிழமை உடுப்பிட்டி இந்திய அமைதி காக்கும் படை முகாமில் வைத்து வல்வெட்டித்துறைப் பிரஜைகள் குழுவினர் முன்னிலையில் விடுதலை செய்யப்பட்டனர்.

இன்று ஞாயிற்றுக்கிழமையும ஒரு தொகுதி இளைஞர்கள் விடுதலை செய்யப்படுவார்களெனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை வடமராட்

(8-ம் பக்கம் பார்க்க)

## பாகிஸ்தானுக்கு வி. பி. சிங் எச்சரிக்கை!

(புதுடில்லி)

இந்தியப்பிராந்தியத்தின் எந்தவொரு பகுதியையும் கைப்பற்ற பாகிஸ்தான் முயலுமேயானால் இந்திய இராணுவமும் 80 கோடி இந்தியர்களும் தக்க பதிலடி கொடுப்பார்களென இந்தியப் பிரதமர் திரு. வி. பி. சிங் நேற்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பாகிஸ்தானின் நடவடிக்கைகளை இந்திய இராணுவம் உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். (சி)

## பிரபா-பாலகுமார் விரைவில் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரனும், ஈழவர் ஜனநாயகச் செயலாளர் திரு. வே. பாலகுமாரனும் விரைவில் சந்திக்க உள்ளனர்.

இங்கிருந்து கடைசி இந்திய அமைதிப்படை வீரர் வெளியேறியதுமே இந்தச் சந்திப்பு நிகழுமென எதிர்பாக்கப்படுகிறது.

### கருணாநிதி - தமிழ்க் குழுக்கள்

# பேச்சுவார்த்தை விபரங்கள்

## வி. பி. சிங்கிற்கு தெரிவிக்கப்படும்

(சென்னை)

இலங்கை தமிழர் பிரச்னை தொடர்பாக தமிழக முதல்வர் திரு. மு. கருணாநிதி சகல தமிழ் குழுக்களுடனும் நடாத்தும் பேச்சுவார்த்தைகளின் முழு விபரங்களையும் பிரதமர் திரு. வி. பி. சிங்கிற்கு நாளை அல்லது நாளை மறுதினம் அமைச்சர் திரு. முரசொலி மாறன் தெரிவிப்பார்.

இதையடுத்து திரு. சிங் மேற்கொண்டு எடுக்க வேண்டிய தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வார்.

இது குறித்து திரு. கருணாநிதி தெரிவிக்கையில்; விடுதலைப் புலிகளுடனும் தொடர்ந்து ஏனைய சகல தமிழ் குழுக்களுடனும் இன்று பேச்சுக்கள்

( -ம் பக்கம் பார்க்க)



யாழ். மத்திய கல்லூரி புதிய மாடிக் கட்டிடத் திறப்பு விழா நேற்றுக் காலை நடைபெற்றபோது பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட யாழ். பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பியை, கல்லூரி அதிபர் திரு. வே. பாலசுந்தரமும், சக ஆசிரியர்களும் அழைத்துவருவதை முதலாவது படத்திலும், பிரதம அதிதி குத்துவிளக்கு ஏற்றி வைபவத்தை ஆரம்பிப்பதை 2வது படத்திலும், மூன்று மாடிக் கட்டிடத்தை பதில் கல்விப் பணிப்பாளர் நாடாவை வெட்டித் திறந்துவைப்பதை 3வது படத்திலும் காணலாம். (படங்கள்: தேவா.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

எம்மிடம் சகலவிதமான மணிக்கூடுகள், ரெலிவிஷன்கள், காஸ்குக்கர்கள், மின்விசிறிகள், மின்னியல் உபகரணங்கள். சகலவிதமான ரி வி. உப உறுப்புக்கள் விற்பனைக்குண்டு. நியு சிற்றி ரேடர்ஸ், 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி 536)

### சேவை

சகலவிலமான மணிக்கூடுகளையும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கும் ஒரே ஸ்தாபனம், வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உதிரிப்பாகங்களை பொருத்தி திருத்திக் கொடுக்கின்றோம். டில்கா வோச் வேக்ஸ்(பஸ்நிலையம் முன்பாக) 404 1/1 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம். (ஏ 545)

### தேவை

இளம் ஆற்றல்மிக்க ஆண், பெண் விற்பனையாளர்கள் தேவை. தங்களின் கல்விச் சான்றிதழ்களுடன் வியாபாரத்துறையில் அனுபவமிக்கவர்கள் 18-02-90 ஞாயிற்றுக்கிழமை காலை நேரில் வருகை தரவும். தகுதிக்கேற்ப ஊதியம் வழங்கப்படும். ஸ்ரீகாந் புத்தகசாலை, 165. மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி 548)

### மணமகள் தேவை

யாழ். கிறிஸ்தவ குடும்பத்தைச் சேர்ந்த 40 வயது தொழில் நுட்பவியலாளராக வெளிநாட்டுக் கம்பனியில் கடமை புரியும் 5' 4'' உயரமுள்ள நற்குணமுள்ளவரும், மாதாந்தம் ரூபா 5000/- சம்பளம் பெறுபவருக்கு 5' 2'' உள்ள 30 வயதிற்குட்பட்ட அழகிய மணப்பெண் தேவை. முதல் கடிதத்தில் எல்லா விபரமும் எதிர் பார்க்கப்படுகின்றது. தொடர்பு:- விளம்பர இலக்கம் 3399, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். சி–3399


# மட்டுநகரில் வீதி ஒழுங்கு பணிகளில் பொலிஸார்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரசபைப் பகுதியில் அண்மைக்காலமாக அதிகரித்துவரும் வீதி விபத்துக்களைத் தடுக்கும் முகமாக தமிழ்ஈழ விடுதலைப்புலிகளுக்கும் பொலிஸ் உயர் அதிகாரிகளுக்குமிடையில் உயர்மட்ட பேச்சுவார்த்தை அண்மையில் நடைபெற்றது.

இப்பேச்சுவார்த்தையின் பயனாக மட்டக்களப்பு நகரப் பகுதியில் தற்போது பொலிசார் வீதி ஒழுங்கு கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இவ்விடயம் குறித்து தமிழ் ஈழவிடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட அரசியல் பிரிவுப்பொறுப்பாளர் திரு. கரிகாலன் பொதுமக்கள் வீதி ஒழுங்குகளை அனுசரித்து நடக்கும்படியும் விசேடமாக வாகனஉரிமையாளர்கள், சாரதிகள் ஆகியோர் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுள்ளார். (க)

# "மட்டக்களப்பினை கட்டியெழுப்ப அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்"

## கரிகாலன் அழைப்பு

(மட்டக்களப்பு)

"கடந்த கால விரும்பத்தகாத நிகழ்வுகளால் சிதைந்து போயிருக்கும் மட்டக்களப்பு மாவட்டத்தை மீண்டும் கட்டியெழுப்ப அனைத்து அரசியல் மதசார்பற்ற உள்ளூர், வெளியூர் நிறுவனங்களும் தமது பூரண ஒத்துழைப்பை நல்க வேண்டும்."

இவ்வாறு விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. கரிகாலன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது: தற்போது சுமுகமான நிலை நிலவுவதால் அபிவிருத்தி வேலைகளை ஆரம்பிக்குமாறும், அவ்வாறு முன் வருவோரின் வாகனங்கள் மற்றும் சொத்துக்கள் போன்றவற்றுக்கு தமது இயக்கம் பூரண பாதுகாப்பு வழங்குமென்றும் தெரிவித்துள்ளார். (க)

# 18 மாணவர் சித்தி

(வட்டுக்கோட்டை)

1989ல் நடைபெற்ற 5ம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை மாணவர்கள் 18 பேர் சித்தியடைந்து, இப்பாடசாலையின் சரித்திரத்தில் ஒரு சாதனையை நிலைநாட்டியுள்ளனர்.

இவர்களில் 9 பேர் வருமானம் குறைந்த பெற்றோரின் பிள்ளைகளுக்கான உதவிப் பணத்தைப் பெற்றுக்கொள்ள உள்ளனர். (139)

# தடைமருந்து வெற்றியாளருக்கு தங்கவேலாயுதம்

(யாழ்ப்பாணம்)

யுனிசெப் நிறுவனம் நாடு பூராவும் சின்னமுத்து தடுப்பு மருந்தை தமது குழந்தைகளுக்கு தாமதமின்றிக் கொடுத்து போட்டியில் பங்குபற்றிய தாய்மாரில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த எட்டுப் பேருக்கு தங்கத்திலான பஞ்சாயுதம் பரிசாகக் கிடைத்துள்ளது.

இப்போட்டியில் வெற்றி பெற்ற ஒருவர்மட்டும் தமக்குரிய பரிசை கொழும்பில் நடைபெற்ற விழாவில் பெற்றுக்கொண்டார்.

வெற்றிபெற்ற ஏழுபேரின் பரிசுகள் விரைவில் யாழ். மாவட்ட சுகாதாரசேவைகள் பணிப்பாளரால் வழங்கப்படும்.

இதேவேளையில் இப்பணியில் சிறப்பாக பணியாற்றிய கோப்பாய் வைத்திய அதிகாரிக்கும் தங்கத்திலான வேலாயுதம் பரிசாக வழங்கப்பட்டுள்ளது. (12)

# கயரோக நிவாரணச் சங்க அலுவலம்

(பருத்தித்துறை)

இலங்கைத் தேசிய கயரோக நிவாரணச் சங்க வடமராட்சிக் கிளைக்கான அலுவலகமொன்று அண்மையில் துன்னாலையில் திறந்துவைக்கப்பட்டது.

கிளைத் தலைவர் திரு. ஆ. க. மாணிக்கம் தலைமையில் நடைபெற்ற இவ்வலுவகத் திறப்புவிழாவின்போது பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு. கே. பாலச்சந்திரன் அலுவலகத்தைச் சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைத்தார்.

பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்துவைத்தார்.

இலங்கைத்தேசிய கயரோக நிவாரணச் சங்க வடமராட்சிக் கிளைக்கு புதிய மாடிக் கட்டிடமொன்றும் [illegible]


இலவசம்! இலவசம்!!

டெல்டா டொலர் வெகுமதி

டெல்டா உறைகளை சேகரித்து வைத்திருப்போர் அவற்றைக் கொடுத்து டெல்டா டொலர்களைப் பெற்று அதன் மூலம் பரிசுகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

உங்கள் வியாபாரிகளிடமும் எம்மிடமும் டொலர்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

பரிசுகளுக்கு:

விஜயா ஸ்ரோஸ்,

64, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-3397)



பத்திரிகையாளராக வர விரும்புகிறீர்களா?

பத்திரிகைத் தொழிலில் ஆர்வமுடன் ஈடுபட்டுப் பயில விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

எழுத்துத் துறையில் ஈடுபாடும், மொழியறிவும் விசேட தகைமைகளாகக் கணிக்கப்படும்.

வயது, கல்வித்தகைமை, எழுத்துத்துறை அனுபவம், தமிழ், ஆங்கில மொழித்தேர்ச்சி உட்பட சகல விபரங்களுடனும் 23-2-90க்கு முன் விண்ணப்பிக்கவும்.

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

நிர்வாகி,
'ஈழநாடு',
த. பெ. எண். 49
யாழ்ப்பாணம்.



Project Management Services Ltd.
33, Brown Road, Neeraviadi, Jaffna

Engineering Consultants & Project Managers

CHARTERED CIVIL / STRUCTURAL ENGINEER

An exciting opportunity has occurred in our organization for an experienced Engineer with a flair and capacity to lead the civil and Structural Engineering Section.

The prime area of work for this position is in structural design of multi-story buildings. As Section Leader you must have a flexible attitude and possess the ability to solve a variety of design problems and direct your staff to do likewise.

This senior position requires a Charted Engineer at least 35 years of age, with previous experience in similar capacity.

A very attractive salary will be offered to the successful applicant with excellent career prospects.

If you are the right person send a C.V. to the undermentioned on or before 24 February, 1990.

Operations Manager
Project Management Services Ltd.,
33, Brown Road,
Jaffna.

(C 543)



3-வது ஆண்டு நினைவஞ்சலி



கி. கலைச்செல்வன்

மலர்வு : 30 - 12 - 1963 உதிர்வு : 22 - 02 - 1987
திதி : 18 - 02 - 1990

இறைவா உன்னைச் சிங்காரித்து
உன் அழகைப் பார்ப்பதே அவன் நினைவு

ஐயா, அம்மா, மாமாமார், அத்தைமார், அக்காமார், அத்தான்மார், தம்பிமார், தங்கைமார்.

''மணிரங்கம்'',
கேசாவில் பிள்ளையார் கோவில் வீதி,
யாழ்ப்பாணம். (சி-3398)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னுபிரிக்க அரசு - மண்டேலா இரகசியப் பேச்சுவார்த்தை

## கறுப்பர்கள் நம்பிக்கை, வெள்ளையர் மனம் மாற்றம்?

(ஜொகனேஸ்பேர்க்)

27 வருட சிறைவாசத்தின் பின்னர் விடுதலை செய்யப்பட்ட ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் திரு. நெல்சன் மண்டேலாவிற்கும் தென்னுபிரிக்க அரசாங்கத்திற்குமிடையே ரகசியப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகிறது.

திரு. மண்டேலாவின் விடுதலை தொடர்பாக ஜனநாயகம் விடும்பும் உலக நாடுகள் மகிழ்ச்சி தெரிவித்த அதே வேளையில் தென்னுபிரிக்காவிலுள்ள வெள்ளையர்கள் மண்டேலாவின் விடுதலைக்கு எதிர்ப்பை தெரிவித்துள்ளனர்.

தென்னுபிரிக்க அரசின் புதிய அதிபர் தற்போது மேற்கொண்டு வரும் சில ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் கறுப்பினத்தவரிடையே நம்பிக்கையை ஏற்படுத்தி வருகிறது.

நாட்டில் அமைதியையும், சமாதானத்தையும் ஏற்படுத்துவதற்கு திரு. மண்டேலாவின் விடுதலை வாய்ப்பாக அமையும் என்று மண்டேலா விடுதலை செய்யப்பட்டபின்னர் தென்னுபிரிக்க அதிபர் திரு. டபிள்யூ. டி. கிளார்க் தெரிவித்திருந்தார்.

அவர் விடுதலையாவதற்கு முன்னர் சிறையில் சென்று திரு. கிளார்க் மண்டேலாவுடன் சுமுகமான முறையில் உரையாடியமை குறிப்பிடத்தக்கது.

இருபகுதியினருக்குமிடையே தற்போது நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகள் வெள்ளையர்கள் மத்தியிலுள்ள கசப்புணர்வை நீக்கி புரிந்துணர்வுள்ள ஒரு நிலைக்கு மனமாற்றம் ஏற்படலாம் என்று அரசியல் அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர். (து)

## மண்டபம் முகாம் அபிவிருத்தி

(சென்னை)

வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலுள்ள ஆயிரக்கணக்கான அகதிகள், மண்டபம் முகாமில் தஞ்சமடைந்துள்ளதனைத் தொடர்ந்து மண்டபம் முகாமினை அபிவிருத்தி செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கட்டடம் புனரமைப்பிற்காக மூன்று லட்சம் ரூபாவும், மின்னிணைப்புக்கு எழுபத்தெட்டாயிரம் ரூபாவும் மண்டபம் முகாமிற்கு தமிழக அரசினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் இங்குள்ள மருத்துவமனைக்கு பெண் மருத்துவர் ஒருவரும், 14 மருத்துவ தாதிகளும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். (து)

### புதிய கல்வியாண்டுக்கு தெரிவானவர்கள்

## பல்கலைக்கழகம் அறிவிக்கும் திகதியில் பெயர்களைப் பதிவுசெய்யவேண்டும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் புதிய கல்வியாண்டுக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளவர்கள் பல்கலைக்கழகம் அறிவித்துள்ள திகதிகளில் பெயர்களைப் பதிவு செய்யவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளனர்

பெயர்களைப் பதிவு செய்யத் தவறும் மாணவர்களின் இடங்களிறகுப் புதிய மாணவர்களை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு நியமனம் செய்யும், இத்தகவலை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் மாணவர்பதிவுக்குப்பொறுப்பான சிரேஷ்ட உதவிப்பதிவாளர் திருமதி மங்கையர்க்கரசி பாலகிருஷ்ணர் தெரிவித்துள்ளார்.

இம்முறை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு மருத்துவபீடத்துக்குத் தொண்ணூற்றியைந்து பேரும், விவசாயபீடத்துக்கு இருபத்தாறு பேரும், உயிரியல் விஞ்ஞான பீடத்துக்குத் தொண்ணூற்றிநாலு பேரும். பௌதீக விஞ்ஞானத்துக்கு நூற்றிஎழுபத்துமூன்று பேரும், தொழில்முகாமைத்துவத்துக்கு நூற்றியொருபேரும். வர்த்தகத்துக்கு நூற்றிநாற்பத்திநாலு பேரும், கலைப்பீடத்துக்கு இருநூற்றி முப்பத்தைந்து பேருமாக எண்ணூற்றி அறுபத்தெட்டுப்பேர் தெரிவாகியுள்ளனர். இத்தொகை சென்ற ஆண்டைவிட கூடுதலானதாகும். (12)

கலைப்பீடத்துக்கு மாணவர்களைப் பதிவு செய்வது இம்மாதம் இருபத்தாறும் திகதியும், வர்த்தக முகாமைத்துவ பீடத்துக்கு பதிவு செய்வது இருபத்தேழாம்திகதியும், விஞ்ஞான பௌதிகம், விஞ்ஞான உயிரியல் பீடத்துக்கு இருபத்தெட்டாம் திகதியும்; மருத்துவவிவசாயபீ த்துக்கு மார்ச் மாதம் முதலாம் திகதியும் பதிவுகள் நடைபெறும்.

குறிப்பிட்டதினத்தில் மாணவர்கள் தமது பதிவுக்கான கடிதம், அடையாளஅட்டை, செலுத்தவேண்டிய பணம் உட்பட சகல ஆவணங்களையும் சமர்ப்பித்து பதிவை மேற்கொள்ளுமாறு பல்கலைக் கழக நிர்வாகம்கோரியுள்ளது.

### முல்லை மாவட்டம்

## புதிய உதவி அ. அதிபர் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது!

(மாங்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஐந்தாவது உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. கே. பொன்னம்பலத்தின் முயற்சியினால் ஒட்டுசுட்டானில் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஒட்டுசுட்டான் புதிய உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து ஒட்டுசுட்டான், வித்தியாலயம் புளியங்குளம். கருவேலன்கண்டல், கூளாமுறிப்பு, பண்டாரவன்னி, பேராறு, கனகரத்தினபுரம், முத்தையன்கட்டுக்குளம், முத்துவிநாயகர்புரம், கணேசபுரம், கற்சிலைமடு, காதலியார் சமாளன்குளம், மணவாளன்பட்டமுறிப்பு. தச்சடம்பன். அம்பகாமம், ஒலுமடு. மாங்குளம், பனிக்கன்குளம், திருமுறிகண்டி, இந்துபுரம், தட்டயமலை ஆகிய கிராம சேவகர் பிரிவுகளும் முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து பெரியகுளம், ஒதியமலை, பழம்பாசி, பெரிய ஈத்திமடு. தண்டுவான் ஆகிய கிராம சேவகர் பிரிவுகளும் இணைக்கப்பட்டுள்ளன. இப்புதிய அலுவலகத்தின்கீழ் 14,821 குடிசனமும், 546 2 சதுர கிலோ மீற்றர் பரப்பை

(7ம் பக்கம் பார்க்க)

## கோரிக்கை

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் சித்த ஆயுர்வேத வைத்தியசாலை ஒன்றை அமைத்துத் தருமாறு, வடமராட்சி கிழக்குப் பகுதியின் பல பொதுச் சேவை நிறுவனங்கள் ஒன்றிணைந்து யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். டிவகலாலவைக் கேட்டுள்ளனர்.

## வீதி புனரமைப்பு

(புலோலி)

கரவெட்டிப் பகுதியிலுள்ள அரசடி - சோனப்பு வீதி அண்மையில் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

சுமார் இருமைல் நீளமான இவ்வீதி மிக மோசமாகப் பழுதடைந்திருந்தமையை இப்பகுதி பொது ஸ்தாபனங்கள் சுட்டிக்காட்டியதையடுத்து இவ்வீதி திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. (61)

### போதைவஸ்து நிலைமையை

## விளக்கும் ஓவியப் போட்டி!

(புலோலி)

யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் ஜி. சி. ஈ. சாதாரணதர, உயர்தர வகுப்புகளில் பயிலும் மாணவரிடையே ஓவியப்போட்டி நடத்தப்படவுள்ளது.

யாழ். லயன்ஸ் கழகம் இப்போட்டிக்கான ஒழுங்குகளைச் செய்துள்ளது.

''பொருத்தமான சுலோகங்களுடன் போதைவஸ்துக்களின் தீமை'' என்ற தலைப்பில் ஓவியங்கள் அமையவேண்டும். போட்டிக்கு அனுப்பப்படும் இவ் ஓவியங்கள் ஈழத்தில் இதுவரை வெளிவராததாகவும், தமிழர்களின் பாரம்பரியம் பண்பாடுகளைப் பிரதிபலிக்கவும் வேண்டும்

போட்டிக்கு ஓவியங்களை அனுப்பும் மாணவர்கள் தமது பாடசாலை அதிபர்கள் மூலம் உறுதிப்படுத்தி யாழ். லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் வி. யோகநாதன் இல 178, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு இம்மாதம் 28 ம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (61)

## வடமராட்சிபாடசாலைகளுக்கு இலவச பாடநூல்!

(புலோலி)

வடமராட்சிப் பகுதியிலுள்ள பாடசாலைகளுக்கு விநியோகிப்பதற்கென இவ்வாண்டுக்கான முதலாவது தொகுதி இலவசப் பாடநூல்கள் வடமராட்சி கோட்டக்கல்வி அலுவலகத்துக்கு வந்து சேர்ந்துள்ளன.

இங்கு வந்து சேர்ந்துள்ள இலவசப் பாடநூல்களை வடமராட்சி கோட்டக்கல்விப் பகுதியிலுள்ள கொத்தணிப்பாடசாலைகளுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகளை வடமராட்சி கோட்டக் கல்விஅலுவலக உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு. பொ. வீரபத்திரன் மேற்கொண்டுள்ளார். (61)

### அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்

## யாழ். விழிப்புலனற்றோர் குறைபாடுகளை நீக்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ். விழிப்புலனற்றோர் குறைபாடுகளைக் களைந்து அவர்களுக்கான தொழில் வாய்ப்புக்களைப் பெருக்குவதற்காக தமிழ் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் உதவிகளை மேற்கொள்ளுமென, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைப் பீடாதிபதியும், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத் தலைவருமான பேராசிரியர் கே. சிவத்தம்பி தெரிவித்துள்ளார்.

இத்தகவலை யாழ். செவிப்புலனற்றோர் சங்கத்தின் எட்டாவது ஆண்டு நிறைவுவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் கூறினார். இவ்வைபவம் யாழ்ப்பாணம் கில்னர் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

கூட்டத்திற்குச் சங்கத் தலைவர் அ. கோ. பாலநாயகம் தலைமை தாங்கினார்.

பேராசிரியர் கே. சிவத்தம்பி தமது உரையில், வடக்கு-கிழக்கு மாகாணத்தில் ஒருங்கிணைந்த செவிப்புலனற்றோருக்கு ஒரு சபை நிறுவுவதற்கு இவர்கள் ஏற்ற ஒழுங்குகளைத் தாமதமின்றிச் செய்யவேண்டும். அச்சபைக்கு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் பத்தாயிரம் குபாவை வழங்கும் என்று உறுதியளித்தார்.

கைதடியில் இயங்கும் தும்புக் கைத்தொழிற்சாலையில் சில தேவைகள் இருப்பதாக என்னிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவற்றை நாம் பரிசீலித்து உதவிகளை வழங்கவுள்ளோம் என்றார்.

யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளர் திரு. வி. வி. பாலசிங்கம் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில்: செவிப்புலனற்றோரது வாழ்வில் பல பிரச்னைகள்உள்ளதென்பதை உணர்கிறேன். அவர்களுக்கு எவ்வாறு மாநகரசபை உதவ வேண்டுமென்பதையும் ஆராய்ந்து வருகின்றேன் என்றார்.

வாழ்வில் செவிப்புலனற்றோர் தமது சைகைகள் மூலம் பேசியதை, மக்களுக்குக் கைதடி செவிப்புலன் விழிப்புலனற்றோர் பாடசாலை உப அதிபர் எஸ். கோபாலகிருஷ்ணன் வாய்மூலம் தெரிவித்தார். (12)

### சட்ட விரோத

## மின்பாவனை அதிகரிப்பு

(புங்குடுதீவு)

புங்குடுதீவுப்பகுதியில் என்றுமில்லாதவாறு சட்ட விரோத மின்பாவனை அதிகரித்து வருகின்றது.

புங்குடுதீவின் பல பகுதிகளிலும் இவ்வாறான சட்ட விரோத மின் இணைப்புக்களால் மின்பாவனையாளர்கள் பெரிதும் பாதிப்படைந்து வருகின்றார்கள்.

இறுப்பிட்டி, ஊரைதீவு, வீராமலை, மண்காடு போன்ற பல பகுதிகளிலுள்ள வீடுகளில் இரவு ஆறுமணி என்றதும் மின் இணைப்புக்கான வேலைகளில் பலர் ஈடுபடுகின்றனர். [illegible] தொலைக்காட்சி பெட்டிகளும் இயங்கி வருகின்றன. (101)

## "கல்வி தமிழ் மக்களின் பாரம்பரிய சொத்தாகும்" - தீபன்

(புலோலி)

பாடசாலைகளில் மாணவர்களின் கல்விப்போதனை ஒழுங்காக நடைபெற வேண்டும். கல்வியுடன் மாணவர்கள் அனைவரும் பங்கேற்கும் வகையில் விளையாட்டுப்போட்டிகள், கலைவிழாக்கள் சாரணியம் என்பனவும் இடம்பெற வேண்டும்.

இவ்வாறு தமிழ் ஈழவிடுதலைப்புலிகளின் மக்கள் முன்ணணி வடமராட்சி அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் திரு. தீபன், பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் இடம் பெற்ற கல்வி அபிவிருத்தி சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்றில் கலந்துகொண்டு பேசுகையில் கூறினார்.

வடமராட்சி கோட்டக் கல்வி அதிகாரி திரு. பொ. வீரபத்திரன் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் திரு. தீபன் மேலும் பேசுகையில் கூறியதாவது:

அதிபர்கள் ஆசிரியர்கள் பாடசாலை, கல்வி வளர்ச்சியில் கூடுதல் அக்கறை எடுக்க வேண்டும். கல்வி தமிழ் மக்களின் பாரம்பரிய சொத்தாகும். மாணவர்களின் கல்விக்கு தடையாக உள்ள காரணிகளை நன்கு ஆராய்ந்து கண்டுபிடித்து அவற்றை அகற்றுவதற்கு புலிகள் எப்போதும் தயாராக இருக்கிறார்கள். கல்வியை பொழுது போக்காகவோ அல்லது ஒரு வியாபாரப் பொருளாகவோயாரும் கருதக்கூடாது.

வடமராட்சி கோட்டக் கல்வி அதிகாரி திரு. பொ. வீரபத்திரன் பேசுகையில் கூறியதாவது;

இவ்வருடத்தை வடமராட்சிப் பகுதியில் கல்வி ஆண்டாகக் கருதி பாடசாலைகளில் நிலவும் பிரச்சினைகளை தீர்த்து வைப்போம் என்றார். (61)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

பணம் திரட்டுவதில் ஆசைகொண்டு ஆற்றலைச் செலவிடாமல் நாட்டுக்கு நன்மை செய்தலே மேலானது.

—மகாத்மா காந்தி

## நமது நோக்கு

# அவர்கள் ஏன் அங்கே போகிறார்கள்?

அண்மைக் காலத்தில் உலகச் சந்தையில் ஜப்பானியர் அமெரிக்காவிற்குப் பெரும் 'தலையிடி' யாக விளங்கி வருகின்றனர்.

எலக்ரோனிக் கருவிகளா? சொனி. மோட்டார் சயிக்கிலா? ஹொண்டா, சினிமாத்துறையா? அமெரிக்காவின் ஹொலிவூட்டிலேயே ஜப்பானியர் பல பிரபல்யமான ஸ்டூடியோக்களை வாங்கிவிட்டார்கள்.

தற்போது கிடைத்துவரும் செய்திகளின்படி வங்கித் தொழிலிலும் முதலிடம் பெற்றுவருகிறார்கள். அமெரிக்க, பிரான்சிய, ஜேர்மனிய வங்கிகள் ஒவ்வொன்றாகச் சரிந்து வர, அந்த இடங்களை ஜப்பானிய வங்கிகள் பிடித்துக் கொள்கின்றன. உலகின் முதற் பத்துப் பெரிய வங்கிகளில் ஜப்பான் புகுந்துள்ளது.

இப்படி இருந்தும், ஜப்பானிய மாணக்கர் இன்றும் அமெரிக்காவிற்கு கல்வி கற்கவெனப் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

அமெரிக்க தொழில்முகாமைத்துவப் பாடசாலைகளில் மாணக்கர் தொகையில் நான்கு சத விகிதத்தினர் ஜப்பானியர். உலகப் புகழ்பெற்ற மசாசு செற்ஸ் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்திலோ பன்னிரண்டு சதவீதமானோர் ஜப்பானியர்.

எமது பகுதியிலே, தரப்படுத்தற் கொள்கையாற் பாதிக்கப்பட்டனர் உயர் கல்வியை நாடிய மாணக்கர். அதிகளவு புள்ளிகள் பெற்றும் பல்கலைக்கழகப் படிப்பிற்கு வாய்ப்பில்லை என ஏங்கித் தவித்தனர்: உளரீதியாகப்பெரும்பாதிப்புக்குள்ளாகினர்.

வசதியும், வாய்ப்பும் உள்ளவர்களோ பெரும் பணச் செலவில் மேலை நாடுகளுக்குத் தமது பிள்ளைகளைக் கல்விக்காக அனுப்பிவைத்தனர். சென்றவர்களில் பெரும்பாலோர் சென்றவர்கள்தான்!

சென்றனர்; கற்றனர்; சென்ற இடங்களிலேயே வேலைவாய்ப்பைப் பெற்றனர்; தம் சொந்தவாழ்க்கை வசதிகளையே பெருக்கினர்.

ஆனால், ஜப்பானிய மாணக்கர்கள் என் போகிறார்கள்? எதைப்படிக்கிறார்கள்? எப்படிப் படிக்கிறார்கள்? பின் என்ன செய்கிறார்கள்?

தென் கலிபோனியாப் பல்கலைக்கழக வர்த்தகப் பேராசிரியர் ஜாக் லூயிஸ் கூறுவது என்ன? ''வர்த்தகத் திறன்களைக் கற்பது ஜப்பானிய மாணக்கரின் முன்னுரிமைப் பட்டியலில் மிகக் கீழேயுள்ளது. ஆங்கில மொழித்திறன், அமெரிக்கப்பண்பாடு ஆகியவற்றிலேயே அக்கறை காட்டுகிறார்கள்!''

வர்த்தகத்திறன்களையோ தொழில் நுட்பத்தினையோ மாத்திரம் கற்கவா அங்கு போகிறார்கள்? மீன் குஞ்சுக்கா நீச்சல் கற்றுக் கொடுக்கவேண்டும்?

அந்த நாட்டிலே தமது பொருட்களை எவ்வாறு விற்கலாம்? அந்த நாட்டு மக்களின் பண்பாடு என்ன, விருப்பு வெறுப்புகள் எவை எத்தகைய பொருட்களை எப்படித் தயாரித்தால் அங்கு விற்பனையாகும் என்றெல்லாம் கவனித்து மீண்டும் தமது நாடுகளுக்குத் திரும்புகிறார்கள்.

கற்ற கல்வியை, பெற்ற அனுபவத்தை, தமது சொந்த நாட்டு வளர்ச்சிக்கு வழங்குகிறார்கள். அங்கே நாட்டுப்பற்று பளிச்சிடுகிறது!

எமது மண்ணின் மைந்தர்களும் நாட்டுப் பற்றோடு கருமம் ஆற்றவேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறுகிறோம்.

## ஞாயிறு சிந்தனை

### பரிசுத்த வேதாகமத்திலிருந்து

நல்லவன் கர்த்தரிடத்தில் தயை பெறுவான்; துர்ச் சிந்தனைகளுள்ள மனுஷனை அவர் ஆக்கினைக்குட்படுத்துவார்.

துன் மார்க்கத்தினால் மனுஷன் நிலைவரப்படான்; நீதிமான்களுடைய வேரோ அசையாது

குணசாலியான ஸ்திரீ தன் புருஷனுக்குக் கிரீடமாயிருக்கிறாள்; இலச்சை உண்டுபண்ணுகிறவளோ அவனுக்கு எலும்புருக்கியியாருக்கிறாள்.

நீதிமான்களுடைய நினைவுகள் நியாயமானவைகள்; துன்மார்க்கருடைய ஆலோசனைகளோ சூதானவைகள்.

தன் புத்திக்குத் தக்கதாக மனுஷன் புகழப்படுவான்; மாறுபாடான இருதயமுள்ளவனோ இகழப்படுவான்

தன் நிலத்தைப் பயிரிடுகிறவன் ஆகாரத்தினால் திருப்தியடைவான்; வீணரைப் பின்பற்றுகிறவனோ மதயற்றவன்.

அவனவன் தன்தன் வாயின் பலனாய் திருப்தியடைவான்; அவனவன் கைக்கிரியையின் பலனுக்குத் தக்கதாக அவனவனுக்குக் கிடைக்கும்.

மதியீனனுடைய வழி அவன் பார்வைக்குச் செம்மையாய் இருக்கும்; ஆலோசனைக்குச் செவி கொடுக்கிறவனோ ஞானமுள்ளவன்.

சத்தியவாசகன் நீதியை வெளிப்படுத்துவான்; பொய்ச் சாட்சிக்காரனோ வஞ்சகத்தை வெளிப்படுத்துவான்.

சத்திய உதடு என்றும் நிலைத்திருக்கும்; பொய் நாவோ ஒரு நிமிஷம் மாத்திரம் இருக்கும்.

தீங்கைப் பிணைக்கிறவர்களின் இருதயத்தில் இருக்கிறது கபடம்; சமாதானம் பண்ணுற ஆலோசனைக்காரருக்கு உள்ளது சந்தோசம்.

நீதிமானுக்கு ஒரு கேடும் வராது: துன்மார்க்கரோ தீமையினால் நிறையப்படுவார்கள்.

பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள்; உண்மையாய் நடக்கிறவர்களோ அவருக்குப் பிரியம்.

நீதியின் பாதையில் ஜீவன் உண்டு; அந்தப் பாதையில் மரணம் இல்லை.

# அகதியா...? நட்பு நாட்டிலிருந்து வேண்டாம் பகை நாட்டிலிருந்து வரட்டும்...!

அகதிகள்... அகதிகள்... இன்று உலகில் எங்கு பார்த்தாலும் அகதிகள்...

இதில் பரிதாபம் என்ன வென்றால் அகதிகளின் நலன்களைக் கவனிப்பதறகாக ஸ்தாபிக்கப்பட்ட அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகராலயம் கூட முறிந்துபோகும் நிலைக்குள்ளாகி அதுவும் சேர்ந்து அகதியாகப்போகும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது அந்த அளவுக்கு இன்று உலகில் அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்துவிட்டது.

அதிகரித்துவிட்ட அகதிகளுக்கே உள்ளதெல்லாம் செலவு செய்துவிட்டு அகதியாகிவிட்ட மேற்படி ஸ்தாபனம் தனக்குஉதவும்படி உதவி வழங்கும் நாடுகளைக் கேட்டிருக்கிறது.

உதவி வழங்கும் நாடுகள் உதவாத பட்சத்தில் ஐ. நா. முகாம்களில் தஞ்சமடைந்திருக்கும் ஆயிரககணக்கான அகதிகள் மடிந்துபோய் விடுவார்கள் எனவும் அகதிகளுக்கான ஐக்கியநாடுகளின் உயர் ஸ்தானகராலயம் எச்சரித்திருக்கிறது.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடு ஒன்றின்படி உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும்சுமார் ஒன்றரைக் கோடி மக்கள் அகதிகளாகி தங்கள் நாடுகளிலிருந்து இடம் பெயர்ந்து வேற்று நாடுகளில் தஞ்சமடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருககிறது.

யுத்தம், சிவில்கலவரங்கள், மற்றும் இன, மத அரசியல்கலவரங்களுக்காளாகியே இந்த ஒன்றரைக்கோடி மக்களும் தங்கள் சொந்த இருப்பிடங்களைவிட்டு வேற்று நாடுகளில் தஞ்சமடைந்திருப்பதாகஅந்த மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பத்து வருடங்களுக்கு முன்னர் இருந்த அகதிகள் தொகையை விட இது இரட்டிப்பானது எனவும் அதில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

ஆபிரிக்கா, தென்மேற்கு ஆசியா ஆகிய பிராந்தியங்களைச் சேர்ந்த மக்களே அதிக அளவில் அகதிகளாக வெளியேறியுள்ளனர்.

ரஷ்யாவிலருந்து கடந்த வருடம் அதிகளவு யூதஇனத்தவர்கள் அமெரிக்காவை நோக்கி அகதிகளாகச்சென்றனர். அமெரிக்காவில் இந்த அகதிகளை குடியமர்த்துவதற்கு ஏழாயிரம் கோடி அமெரிக்க டொலர்களை ஒரு குடியேற்றத் திட்டத்துக்கு என்றஅடிப்படையில் அமெரிக்கா செலவு செய்ய வேண்டியிருக்கிறது.

அமெரிக்கா இந்த நிதியாண்டில் ஒரு லட்சத்து இருபத்தையாயிரம அகதிகளை தனது நாட்டுக்குள் அனுமதிக்கத் திட்டமிட்டிருக்கிறது.

- பெஞ்சமின் இராசரத்தினம் -

இவர்களுள் சுமார் ஐம்பதாயிரம் பேர் ரஷ்ய நாட்டைச் சேர்ந்தவர்களாயிருப்பர். எஞ்சியோரை மனிதாயிமான அடிப்படையில் ஏனைய நாடுகளிலிருந்து எடுத்துக்கொள்ளவும் அமெரிக்கா திட்டமிட்டிருக்கிறது.

எமது நண்பர்களிடமிருந்து வருவோரைவிட எதிரிகளிடமிருந்து வருவோரையே அதிகளவில் அகதிகளாக சேர்த்துக் கொள்ள விரும்புகிறோம் என அமெரிக்காவின் அகதிகள் அமைப்பொன்றைச சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

தஞ்சம் கோரி அபயக்கரம் நீட்டுவோர் விடயத்தில்கூட அமெரிக்கா எத்தகைய ஒரு மனப்போக்கைக் கடைப்பிடிக்கிறது பார்ததீர்களா?

எல்சலவடோர் அமெரிக்காவின் ஒரு நட்பு நாடாகும். இந்த நாட்டிலுள்ள அகதிகளிடமிருந்து கிடைக்கும் விண்ணப்பங்களில் 97 சதவீதத்தை வாஷிங்டன் நிராகரித்துவிடுகின்றது. இத்தனைக்கும் கடந்த பத்து ஆண்டு காலத்தில் எல்சலவடோரில் அறுடதாயிரத்துக்கும் அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

ஆபிரிக்க அகதிகளைப் பொறுத்த வரையிலும்கூட அமெரிக்காவில் அவர்கள்தஞ்சமடைவதென்பது மிகவும் கடினமான ஒரு காரியமாகும். ஆபிரிக்காவில் நாற்பதுலட்சம் பேர் அகதிகளாகிவிட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. எதியோப்பியாவிலிருந்து வெளியேறிய சுமார் ஆயிரம் அகதிகளை மாத்திரமே அமெரிக்கா பொறுப்பேற்றுக் கொண்டது. ஒவ்வொருவருடமும் மிகக்குறைந்த அளவு ஆபிரிக்க அகதிகளுக்கே தனது நாட்டில் தஞ்சம் அடைய அமெரிக்கா இடம் கொடுக்கிறது.

ரஷ்ய அகதிகளுக்கு அமெரிக்காவிலிருந்துவரும் ஆதரவு அளப்பரியது. அமெரிக்கயூதர் சமுதாயம் ரஷ்யஅகதிகளுக்கு பக்கபலமாக இருந்துவருவதே இதற்கு முக்கிய காரணமாகும். அத்துடன் அமெரிக்காவிலுள்ள தொண்டர்குடியேற்ற ஸ்தாபனங்களும் ரஷ்ய அகதிகளின் லட்சியத்துக்கு ஆதரவு வழங்கியும் வருகின்றன.

தென்கிழக்காசிய அகதிகளைப் பொறுத்த வரையில் அவர்கள் மூன்றாவது உலக மண்டல நாடுகளைச் சேர்ந்தவர்கள். அமெரிக்காவில் இந்தப் பிரிவினர் ஒரு தொகுதியையே தம் கைவசம் வைத்துள்ளனர். அந்த அளவுககு அவர்கள் செல்வாக்கு அமெரிக்காவில் வேரூன்றியிருக்கிறது. இந்தோசீனாவிலிருந்து இந்த வருடம் 56 ஆயிரத்து 500 பேரை தனது நாட்டுக்குள் வரவழைத்துக் கொள்ள அமெரிக்காவின் ராஜாங்கத் திணைக்களம் திட்டமிட்டிருக்கிறது.

ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாட்டு அகதிகளைப் போலல்லாது, தெற்கிழக்காசிய அகதிகள் அமெரிக்க காங்கிரஸிலும் அதன் நிர்வாகத் துறையிலும் சக்திவாய்ந்தவர்களைத் தம்வசம் வைத்துள்ளனர். கடந்த வருடம் அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற ஜோர்ஜ் புஷ் பெருமளவில் இந்தோசீன அமெரிக்கர்களின் வாக்குகளைப் பெற்றார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. 1975-ம் ஆண்டு முதல் சுமார் ஒன்பது லட்சம் தென் கிழக்காசிய அகதிகள் அமெரிக்காவில் குடியேறியிருப்பதும் ஒரு முக்கியமான அம்சமாகும்.

இதேவேளையில் வெளிநாடுகளில் வசித்துவரும் அகதிகளுக்கு அமெரிக்கா வழங்கிவரும் உதவித் தொகையிலும் பெரும் வெட்டுக்கள் விழ ஆரம்பித்தன. வெளிநாடுகளிலுள்ள அகதிகளுக்கு இந்த உதவித் தொகை தேவைப்பட்ட ஒரு முக்கியமான காலகட்டதில் இந்த வெட்டு விழ ஆரம்பித்தது மிகவும் துர்

(5ம் பக்கம் பார்க்க)

## மக்கள் கருத்து

### 1983-ம் ஆண்டு அகதிகள்

''யாழ் மாவட்டத்தில் இந்தியாவிலிருந்து திருபிய அகதிகளுக்கு 1250 வீடுகள் தேசிய வீடமைப்பு அதிகார சபை ஏற்பாடு'' என்னும் தலைப்பில் பிரசுரமான செய்கண்டு மகிழ்ச்சியடைந்தேன் ஆனால் உண்மையில் 1983-ம் ஆண்டு நடைபெற்ற அனர்த்தங்களால் கொழும்பில் குடியிருந்த வீடுகளை விட்டு உடமைகளை இழந்து அகதிகளாக வந்த என் போன்ற எத்தனையோ குடும்பங்கள் இன்னும் இங்கு வாடகை வீடுகளில் குடியிருக்கிறார்கள் ஆனால் ஈழ மண்ணில் அனர்த்தங்கள் நடைபெற்றபோது வசதி படைத்தவர்கள் உயிருக்குப் பயந்து இந்தியா ஓடினார்கள். அவர்களுக்குக் கிடைக்கும் இச்சந்தர்ப்பத்தில் 1983-ம் ஆண்டில் அகதிளாக ஆக்கப்பட்டு கப்பலில் வந்து இன்றும் அகதிகள் நிலையில் வாழும் பல குடும்பங்களும் உள்ளன. இந்த நிலையைக் கவனத்தில் எடுத்து என் போன்ற பல குடும்பங்களையும் வாழவைக்க உரியவர்கள் கவனம் எடுப்பார்களா?

எஸ். சாமி

யாழ்ப்பாணம்.

### கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு கரிகாலன் விஜயம்

(மட்டக்களப்பு)

கிழக்குப் பல்கலைக் கழகத்திற்கு விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. கரிகாலன் விஜயஞ் செய்து, பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர்கே. சந்தானம் மற்றும் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், நிர்வாகத்தினருடன் கலந்துரையாடினார்.

## பலதும் பத்தும்

### இரவு நடமாட்டம்

தெருக்களிலே மக்கள் நடமாட்டம் அதிகரித்து வருகின்றது.

பகலிலே மாத்திரமா? இரவிலும் நடமாட்டம் அதிகரித்து வருகின்றது. மோட்டார் வாகனங்களிற் செல்வோர் வெளிச்சத்தோடு செல்கிறார்கள்?

ஆனால், சைக்கிளிற் செல்வோர் வெளிச்சத்துடனா போகிறார்கள்.

மின்விளக்குகள் உள்ள பகுதியிலே அதிகம் பிரச்னையில்லை என்பது சிலரது வாதம். ஆனால் கிராமங்களிலே மின்வெளிச்சம் அற்ற வீதிகளிலே, ஒழுங்கை மூலைகளிலே இன்னல்களை விளைவிக்காதா?

எமது பகுதியில் மாத்திரமா இந்தப் பிரச்னை? தென் பகுதியிலும் இதே கதைதான் கொழும்பின் ஆங்கிலத் தினசரி ஒன்றில் ஓர் அன்பர் சட்டப்படி நடவடிக்கை எடுக்கவேண்டுமென வலியுறுத்தியுள்ளார்,

விதிகளா?... அதுவும் வீதிகளுக்கா என்ற நிலை தொடரக்கூடாது. விபத்துக்களைத் தடுக்க, வீண் சிரமங்களைத் தவிர்க்க வெளிச்சத்தோடு செல்வது நல்லதல்லவா?

வாணி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்தியப் படை வெளியேறிய மாவட்டங்களில் விடுதலைப் புலிகளின் ஆதிக்கம்!

## - இந்திய சஞ்சிகையின் கண்ணோட்டம் -

''மார்ச் முப்பத்தோரம் திகதிக்குள் இந்தியப்படை முழுவதும் வெளியேறிய பின்புதான் இலங்கை அரசு என்ன செய்யப் போகிறது என்பது தெளிவாகத்தெரியும். தமிழர்களின் உரிமைகளை மதிக்கப்போகிறார்களா? அல்லது புலிகளுடன் மோதப் போகிறார்களா? உடனடியாக மோதலுக்கு துணிய மட்டார்கள். இந்தியப் படைக்கே 'தண்ணி' காட்டிய புலிகளுடன் மோத இலங்கை அரசு யோசிக்கத்தான் செய்யும்.

இவ்வாறு இந்தியாவில் அதிகம் விற்பனையாகும் கடந்தவார ''ராணி'' சஞ்சிகை விடுதலைப்புலிகள் கையில் ஈழம் என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் தெரிவித்துள்ளது.

அக்கட்டுரையில் மேலும் தெரிவித்திருப்பதாவது மூன்று ஆண்டுகளுக்கு முன் இலங்கையில் போய் இந்தியப்படை இறங்கியது. அப்பொழுது யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இருமாநிலங்கள் மட்டும் விடுதலைப்புலிகளின் ஆதிக்கத்தில் இருந்தன,

ஈழத்தில் இறங்கிய இந்தியப்படை உடனே விடுதலைப் புலிகளை வேட்டையாடத் தொடங்கியது. ஆயிரத்துக்கு மேற்பட்ட புலிகளைக்கொன்று குவித்தது. இலங்கையில் ஆட்சி மாறியதைத் தொடர்ந்து இந்தியப்படை வெளியேறவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ''செத்தும் கெடுத்தான்'' என்பது போல அப்பொதும்கூட விடுதலைப் புலிகளைத் தொடர்ந்து வேட்டையாட ''தேசியபபடை'' என்ற பெயரில் ஒருபடை ஒன்றை ராஜீவ் அரசு உருவாக்கியது.

அந்தப்படையில் ஐயாயிரம் பேர்சேர்க்கப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு மூவாயிரம் ரூபாய் சம்பளம்.

இலங்கையில் தமிழர் வாழும் 8 மாவட்டங்களில் ஏழுமாநிலங்களில் இருந்து இந்தியப்படை வெளியேறியுள்ளது. இந்த ஏழு மாநிலங்களில் தேசியப்படையை முறியடித்து விடுதலைப்புலிகள் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டியுள்ளனர்.

இப்போது யாழ்ப்பாணம் முழுவதும் புலிகளின் ஆதிக்கத்திற்குள் வந்துவிட்டது. இங்கு தேசியப்படைகளிடமிருந்துஎதிர்ப்பில்லை இந்தியப் படை வெளியேற முன்பே வெளியேறிவிட்டார்கள். இருந்திருந்தால் அவர்களை ஒரு கை பார்த்திருப்பார்கள். அவர்கள் யாழ்ப்பாண மக்களின் வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டவர்கள். தமிழ் ஈழத்தின் தலைநகரமான திருகோணமலைமட்டுமே இந்தியப் படையின் ஆதிக்கத்திலுள்ளது. மார்ச் 31 ந் திகதிக்குள் திருகோணமலையில் இருந்தும் வெளியேறி விடுவதாக இந்தியப்படை கூறியிருக்கிறது. அப்பொழுது தமிழ்ஈழம் முழுவதும் விடுதலைப்புலிகளின் ஆதிக்கத்துக்கு வந்துவிடும் என்றும் தெரிவித்துள்ளது.

நன்றி — ராணி

---

பரு. கொழும்பு

## பஸ்சேவை நேரமாற்றம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வடபிராந்திய போக்குவரத்துச்சபையால் நடாத்தப்படும் பருத்தித்துறை - கொழும்பு பஸ் சேவை நேரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக பருத்தித்துறை வடபிராந்திய போக்குவரத்துச்சபை அறிவித்துள்ளது.

இதுவரை காலை 6-30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட பருத்தித்துறை – கொழும்பு பஸ்சேவை 12ம் திகதி முதல் மாலை 5-30 மணிக்கு ஆரம்பமாகும் அதேபோல்கொழும்பிலிருந்து பருத்தித்துறைக்கு ஆரம்பிக்கப்படும் பஸ்சேவையும் இரவு 8-மணிக்கு மாற்றப் பட்டுள்ளது. (62)

---

யாழ். மட்டுநகர்

## கொழும்பு பஸ்சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு டிப்போக்கள் இணைந்து யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்புக்கும் மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்குமான சொகுசு பஸ்சேவையை நடத்தி வருகின்றன.

இப்பஸ் ஒருவழிப்பயணமாக எந்த இடத்திலும் நிறுத்தப்படாமல் நடைபெற்று வருகின்றது இச்சேவை காலை ஏழுமணிக்கு ஆரம்பமாகிமட்டக்களப்பை மாலை 4 மணிக்கு சென்றடையும். இச்சேவைக்கு நூறுரூபா கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. ஆசனங்களை முன்கூட்டியே பதிவு செய்பவர்கள் நூற்றிப்பத்து ரூபாவை ஒரேயடியாக செலுத்தி பயண டிக்கட்டை பெற்றுக்கொள்ளலாம்.

---

# "சேவைகளை விரிவுபடுத்தும் நோக்குடனே சைவத் தொண்டர் நிலையம் உருவானது"

## அமைப்பாளர் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

''சைவத்தொண்டர்களின் சேவைகளை விரிவுபடுத்தும் நோக்குடன் சைவத் தொண்டர் நிலையம் உருவாக்கப்பட்டது'' இவ்வாறு இதன் அமைப்பாளர் திரு.இ சுவாமிநாதன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''1983ம் ஆண்டு முதல் திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம், யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை, நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம் போன்ற பல அமைப்புக்களின் கீழ் பல சைவ சமய ஆலயங்களில் தொண்டர் சேவை ஆற்றிவந்த நாம் இவ்வருடம் முதல் 'சைவத் தொண்டர் நிலையம்' என்ற புதிய அமைப்பினை நிறுவியுள்ளோம்.

''வருடந்தோறும் சுமார் 75 மாணவ, மாணவிகளைத் தெரிவுசெய்து சமயதீட்சை பெறச்செய்து, தொண்டர் வகுப்புகளில் பயிற்சியளித்து, எமது சைவசமயக் கலாசாரத்திற்கு அமையப் பல ஆலயங்களில் தொண்டர் சேவைகள், முதலுதவிச் சேவைகள், சிரமதானம், உடைமைகள் பாதுகாப்பு, சைவசமய நூல் விற்பனைபோன்ற பல சேவைகளை ஆற்றிவருகின்றோம்.

''தொண்டர், சிறுர்களுக்கு நித்திய பூசைக்கு உதவி செய்தல், அர்ச்சனைக்கு உதவி செய்தல், மாலை கட்டுதல், பஜனை, மகேசுரபூசைசெய்தல், குருபூசை செய்தல், சைவ சமய நிகழ்ச்சிகள், கண்காட்சிகள், புத்தக வெளியீட்டு விழா. திருமண வைபவம், மரண வைபவம், தீயணைத்தல், முதலுதவி, வீதி ஒழுங்கு போன்றவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

''எமது சேவை மிகவும் முக்கியத்துவம் அடைந்துள்ள இக்காலகட்டத்தில் எதுவித பலன்களையும் எதிர்பாராது சேவையாற்ற முன்வந்துள்ள தொண்டர், சிறுவர்களது எதிர்கால நன்மைக்கான அத்தியாவசிய உதவிகள், தொழில்துறைப் பயிற்சிகளையும், வேலைவாய்ப்புத் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டுள்ளோம்.'' (54)

---

தொழில் திணைக்கள

# பயிற்சிகளில் ஜனசக்தி பெறுவோர்க்குமுன்னுரிமை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட தொழில் திணைக்களம் இவ்வாண்டு படித்துவிட்டு வேலையற்றிருக்கும் இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் வழங்கும் தொழில் பயிற்சிகளில், ஐம்பதுசதவீத மானவர்கள் ஜனசக்தி பெறுபவர்களின் குடும்பங்களில் இருந்து தெரிவுசெய்யப்படுவர்

ஜனசக்தி பெறும் குடும்பத்தில் இருந்து தொழில் பயிற்சி பெறுபவர்களுக்கு திணைக்களத்தால் வழங்கப்படும் மாதாந்த கொடுப்பனவுகள் முழுவதும் அவர்களது ஜனசக்தி சேமிப்புக் கணக்கிலே வரவு வைக்கப்படும். இத்திட்டம் அடுத்தமாதம் முதல் அமுல் செய்யப்படுமென யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்ட உதவி தொழில் ஆணையாளர் கே. சிவப்பிரகாசம் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தகவல் தருகையில், தொழில் திணைக்களம் வருடாந்தம் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களில் ஒன்பது நடமாடும் பயிற்சி நிலையங்கள் ஊடாக. முன்னூறு பேருக்கு மேசன் வேலை. தச்சு வேலை, தையல் பயிற்சிகளை வழங்கிவருகின்றது இப்பயிற்சியின்போது தொழில் திணைக்களம் மாதாந்தம் நானூற்றி ஐம்பது ரூபாவை வழங்குவதுடன் பயிற்சி முடிவுறும்போது திணைக்களத்தால் சான்றிதழ் வழங்கப்படும.

இதேவேளையில் தொழில் திணைக்களம் யாழ்ப்பாணத்தில் மத்திய தொழில் பயிற்சி நிலையமொன்றையும் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்துவருவதாக அவர் கூறினார். (12)

---

## ஆம்பல் கிடைத்தது

(வடமராட்சி)

வல்வைக் கடலில் மிதந்து வந்த ''ஆம்பல்'' வல்வையை சேர்ந்த மா. இராஜக்கிளி என்பவருக்குக் கிடைத்துள்ளது.

ஒருவித பறவைகளின் எச்சமே ஆம்பலாகும் கூட்டமாக இருக்கும் அப்பறவைகள் போடும் எச்சங்கள் கடலில் மிதந்து வரும்.

இவ் ஆம்பலில் தங்கம் இருப்பதால் பெறுமதிமிக்கதாகக் கருதப்படுகிறது. இப்பெறுமதி மிக்க ஆம்பலே மேற்படி நபருக்குக் கிடைத்த அதிர்ஷ்டமாகும். அவரைத் தொடர்ந்து அவ்வூர் மக்களும். இப்பொன் எச்சம் தேடும் வேலையில் ஈடுபட்டுள்ளனர். (51)

---

# சுயதொழில் முயற்சிக்கு ஐயாயிரம் ரூபா கடன்!

(யாழ்ப்பாணம்)

வடபிரதேச மக்கள் வங்கி யாழ். மாவட்டப் பாடசாலைகளில் முறைசாராக் கல்வித் திட்டத்தின்கீழ் தொழில் பயிற்சி பெற்றவர்களுக்கு ஐயாயிரம் ரூபாவைச் சுய தொழில் முயற்சிகளுக்குக் கடனுக வழ்ங்குகின்றது.

இக்கடன் முதல் கட்டமாக நூற்றிநாற்பத்தைந்து பேருக்கு அவர்கள் விண்ணப்பித்த வங்கிக் கிளையூடாக வழங்கப்பட்டிருப்பதாக வடபிரதேச மக்கள் வங்கி முகாமையாளர் கே. அருளானந்தம் மேலும் தெரிவித்துள்ளார்.

இக்கடன் நூற்றியைந்து பேருக்கு வழங்கப்படுமெனத் தெரிவித்துள்ளார். மக்கள் வங்கி மின்சார இணைப்புக்கு ஐயாயிரம் ரூபாவையும், சூரிய சக்தி சாதனங்களைக் கொள்முதல் செய்ய இருபதினுயிரம் ரூபாவும் உயிர்வாயு சாதனங்களை அமைக்க இரண்டாயிரம் ரூபாவையும் கடனுக வழங்கிவருகிறதெனவும் இக்கடனைப்பெற வங்கிக் கிளைகளில் விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படுவதாகவும் அவர் கூறினுர். (12)

---

# கிளிநொச்சியில் மார்ச் 14ல் பிறப்பு, இறப்பு, பதிவாளர் அலுவலகம் திறப்புவிழா

(மானிப்பாய்)

கிளிநொச்சியில் பிறப்பு இறப்பு பதிவாளர் அலுவலக புதிய கட்டிட திறப்பு விழா மார்ச் மாதம் 14ந் திகதி திறந்துவைக்கப்படவுள்ளது.

பல லட்ச ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்ட இக்கட்டிடம் கொழும்பிலிருந்து வரும் உயரதிகாரிகளினுல் திறந்துவைக் கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இக்காரியாலயத்தில் பணி புரிவதற்கென 12 உத்தியோகத்தர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து இடமாற்றம் பெற்று மார்ச் 1ந் திகதி முதல் தமது பணியை அங்கு தொடரவுள்ளனர். அத்துடன் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த சகல பதிவேடுகளும் (பிறப்பு இறப்பு, கல்யாணம் உட்பட) அடுத்த வாரம் யாழ்ப்பாண பிறப்பு - இறப்பு பதிவாளர் அலுவலகத்திலிருந்து எடுத்துச் செல்லப்படவுள்ளன.

இம்மாவட்டத்தின் புதிய பிறப்பு-இறப்பு பதிவாளராக திரு. நா. சதாசிவஐயர் நியமிகப்பட்டுள்ளார்.

---

மாங்குளம்

# கிராமசேவையாளர் பிரிவில் வீடமைப்பு நன்கொடை நிறுத்தம்

(மாங்குளம்)

மாங்குளம் கிராமசேவை உத்தியோகத்தர் பிரிவில்வழங்கப்படவிருந்த வீடமைப்பு நன்கொடை இடைநிறுத்தப் பட்டுள்ளது.

இப்பிரிவில் வழங்கப்படவிருந்த 57 பேருக்கு வீடமைப்பு நன்கொடையாகரூபா பதினையாயிரம் திடீரென மேலதிகாரிகளால் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இது விடயமாக சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு சிலர் செய்த முறைப்பாட்டை அடுத்து இப்பணம் வழங்குவதில் தடை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

மற்றும் இப்பிரிவில் கடந்த கால சம்பவங்களின் போது இடம் பெயர்ந்து மீண்டும் குடியமர்ந்தவர்கள் [illegible]

மீளக்குடியமர்தல் நிவாரணம் இதுவரை வழங்கப்படவில்லை. (150)

---

# இன்று சங்கரன் அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)

வளவை வளவன் எழுதிய சங்கரன் குறுநாவல் அறிமுகவிழா மந்துவில் றே. க. பாடசாலையில் இன்று நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திரு.க. கதிரேசு தலைமையில் நடைபெறவுள்ள இவ் அறிமுகவிழாவில் செங்கை ஆழியான், வரணியூர்சபா, ஜெயக்குமார், க. இராசதுரை, க. அருள்நேசன் [illegible] ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவார்கள்.

வளவை வளவன் பதிலுரை வழங்குவார், (து)

---

அகதியா

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அதிர்ஷ்டவசமானதாகும். அந்த அகதிகள் சார்பாக வாஷிங்டனில் பேசுவதற்கு ஆதரவாளர்கள் இல்லாது போனதே இதற்குக் காரணமாகும்.

விளைவு? லட்சக்கணக்கான அகதிகள் பசி பட்டினியால் வாட ஆரம்பித்துள்ளனர். (பெ)

---

## இடமாற்றம்

(மாங்குளம)

முத்தையன்கட்டு கனகரத்தினபுரம் பகுதி கிராமசேவை உத்தியோகத்தர் திரு. மு. சிவநேசன் அண்மையில் தச்சடம்பன் கிராமசேவை உத்தியோகத்தராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பயிர்ச்செய்கை உத்தியோகத்தராக இருந்து பதவிமாற்றம் செய்யப்பட்ட திரு. சச்சிதானந்தமூர்த்தி பனிக்கன்குளம் கிராமசேவை உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டுள்ளார். (150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகிலஇலங்கை ரீதியில் இந்துசபயப் போட்டிகள்

(பருத்தித்துறை)

இந்து சமய, கலாசார அலுவலகள் திணைக்களம் அகில. இலங்கை ரீதியில் இந்து சமயப் போட்டிகளை இம்மாத இறுதியில் நடத்தவுள்ளதாக இந்து சமய, கலாசார அலுவல் கள் திணைக்களப் பணிப்பாளர் திரு. ஏ. பாஸ்கரதாஸ் அறிவித்துள்ளார்.

சமயப் பேச்சு, கட்டுரை, பண்ணிசைப்போட்டிகள் மேற்பிரிவு, மத்திய பிரிவு, கீழ்ப் பிரிவு என மூன்று பிரிவாக நடத்தப்படவுள்ளன. இளைஞர்கள் மத்தியில் இந்துசமய அறிவை வளர்த்து, அவர்களின் வாழ்க்கையை வளம் படுத்துவதே இப்போட்டிகளின் நோக்கமாகும் என்று தெரிவிக்கப்பட்டது. (52)

## வில்லிசை

(புங்குடுதீவு)

தமிழ்ஈழ விடுதலைப்புலிகளின் கலை கலாச்சார பகுதியினரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை புங்குடுதீவு மகா வித்தியாலய மண்டபத்தில் ''நடந்து வந்தபாதை'' என்ற வில்லிசை நடைபெற்றது. (101)

## தண்ணீர் தாங்கி திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் த. சத்தியேந்திரா, சி. ஜெகநாதன், ஞாபகார்த்தமாக அரியாலையில் தண்ணீர்த் தாங்கி ஒன்று இன்று ஞாயிறு காலை திறந்துவைக்கப்படவுள்ளது.

பல்கலைக்கழகத்திற்கு முன் கடந்த வருட முற்பகுதியில் இடம்பெற்ற அசம்பாவிதம் ஒன்றில் இருவரும் கொல்லப்பட்டதன் நினைவாகவே சுமார் 45,000 ரூபா செலவில் இந்தத் தண்ணீர்த் தாங்கி அரியாலை அன்புபுரம் அன்னை அமல அன்பகத்தில் நிறுவப்பட்டுள்ளது.

இதற்கான நிதியை மருத்துவபீட மாணவர்கள் திரட்டியிருந்தனர். (12)

முல்லையில்

## கலை கலாசாரப் போட்டிகள்

(மாங்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் பிரதேசரீதியில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரால் நடாத்தப்படவுள்ள கலை கலாச்சார விழாவுக்கான பேச்சு, கட்டுரை, கவிதை சிறுகதை. சித்திரப்போட்டிகள் தற்போது நடைபெற்று வருகிறது.

இன்று 18ம்திகதி நெடுங்கேணி மகா வித்தியாலயத்திலும் 20ம் திகதி ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்திலும், 25ம் திகதி முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியிலும் இப்போட்டிகள் நடைபெறவுள்ளன. (150)

## உடற்பயிற்சி போட்டி

(அச்சுவேலி)

புத்தூர் கொத்தணிப்பாடசாலைகளியையே நடைபெறும் உடற்பயிற்சிப் போட்டிகள் நாளை 19ம் திகதி திங்கட்கிழமை நடைபெறும்.

உடற்பயிற்சிப் போட்டிகள் புத்தூர் கொத்தணி மூலாதாரப் பாடசாலையாகிய ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

## கொத்தணி வருடாந்த மெய்வல்லுநர் போட்டி

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்புகொத்தணிப் பாடசாலைகளுக் கிடையிலான வருடாந்த மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 21-ம், 22-ம் திகதிகளில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பண்டத்தரிப்பு கொத்தணி அதிபரும், மகளிர் கல்லூரி அதிபருமான திருமதி தே. தம்பிராஜா தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டியில் பிரதம அதிதியாக யாழ் கல்வித்திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு. அ. தங்கராசா கலந்துகொள்வார். (72)

## ஆலய நிர்மாண வேலை ஆரம்பம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பசுபதீஸ்வரர் ஆலய (சிவன்கோவில்) இராஜகோபுர நிர்மாண வேலைகள் மீண்டும் கடந்த வாரம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்ஆலய இராஜகோபுர நிர்மாணவேலைகள் 1988 – ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வந்தது. பின்னர் வடமராட்சியில் நடைபெற்ற வன்செயல்களினுல் இவ் இராஜகோபுர நிர்மாண வேலைகள் இடைநிறுத்தம் செய்யப்பட்டன.

தற்போது மீண்டும் தென்னிந்திய சிற்பிகளால் இராஜகோபுரத்திற்கான பாவைகள் அமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## ஓய்வுபெற்றார்

(பண்டத்தரிப்பு)

உடுவில் அரசினர் பத்திய மருந்துச்சாலையின் பொறுப்பதிகாரியாக கடந்த ஐந்து ஆண்டுகளாகக் கடமையாற்றிய டாக்டர் எஸ். சற்குணலிங்கம் இம்மாதம் 7ம் திகதி பதவியிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார். (72)

## வவுச்சர் நாளை வரும்

(மானிப்பாய்)

இம் மாதத்திற்குரிய ஓய்வூதிய வவுச்சர்கள் இன்று அல்லது நாளை யாழ். செயலகத்திற்கு வந்து சேருமென தெரிவிக்கப்படுகிறது.

இவற்றை அடுத்த வாரம் உரியவர்கள் பெற்றுக்கொள்ளலாமென்றும் இதற்கான காசோலைகள் எழுதப்பட்டு வங்கிகளுக்கு அனுப்புவதற்கு தயார் நிலையில் இருப்பதாகவும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (71)

## பேச்சுப்போட்டி

(புலோலி)

சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலய கூட்டுப் பிரார்த்தனைச் சபையும், சரசாலை இந்து இளைஞர் சங்கமும் இணைந்து மாணவர்களிடையே நடத்தும் பேச்சுப் போட்டி இம்மாதம் 23 ஆம் திகதி சிவராத்திரி தினத்தன்று மேற்படி ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

இப்போட்டி ஆரம்ப, கீழ், மத்திய, மேற்பிரிவுகளாக நடைபெறவுள்ளது. (61)

## உடற்பயிற்சிப் போட்டி

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு கொத்தணிப் பாடசாலைகளின் வருடாந்த உடற்பயிற்சிப் போட்டி நாளை 19-ம் திகதி திங்கட்கிழமையன்று பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. (72)

## நிர்வாகிகள்

(மன்னார்)

மன்னார் உதவி அரச அதிபர் அலுவலகத்தின் நலன்புரிச்சங்கம் அண்மையில் கூடியபோது நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ரி. இராமலிங்கம் (உ. அ. அதிபர்), உப தலைவர் திரு. ஈ ஜே ஜே. மிராண்டா, செயலாளர்; திரு. என். சிவகுமாரவேலு, பொருளாளர்; செல்வி எல். ஆர். அய்யாப்பிள்ளை மற்றும் ஆறுபேர் அடங்கிய செயற்குழுவினர் தெரிவு செய்யப்பட்டனர். (85)

0 0 0

(மாங்குளம்)

மாங்குளத்தில் புதிய வர்த்தக சங்க நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: ஆ. விஸ்வலிங்கம், உப தலைவர்: ஆர். சண்முகலிங்கம், செயலாளர்; கே. பூபாலசிங்கம், உப செயலாளர்: எ. குணரத்தினம், பொருளாளர்: என். சுப்பிரமணியம், மற்றும் ஏழுபேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (150)

# இவ்வார பலன்

18 - 02 - 1990 முதல் 24 - 02 - 1990 வரை

—ஸச்சி—

காலநிலை: சூரியன்- கும்பத்தில்; சந்திரன்- விருச்சிகம் முதல் கும்பம்வரை: செவ்வாய் தனுவில்; புதன்- மகரத்தில்; வியாழன்- மிதுனத்தில்; சுக்கிரன்- தனு மகரத்தில்; சனி- தனுவில்; இராகு- மகரத்தில்; கேது கடகத்தில்.

மேடம்: துணிச்சலோடு கருமமாற்றுவீர்கள், தொழில் லாபம் தரும், குடும்பத்தில் அமைதி நிலவும், உடல் நலனில் அக்கறை தேவை, பணப் புழக்கம் சுமாராக இருக்கும், முன் பின் தெரியாதவர்களின் உதவி கிட்டும்.

இடபம்: எதிர்ப்புக்களைச் சமாளிக்க வேண்டியிருக்கும், பொதுநலத்துறைகளில் பாராட்டுண்டு. பணவரவு திருப்திகரமாவிருக்கும், குடும்பத்தில் பூசல்நிலவினும் அமைதியுண்டு பயணத்தின் போது அவதானம் தேவை.

மிதுனம்: குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும், தொழிலில் மந்தநிலை இருக்கும், பணப்புழக்கம் அதிகமாக இருக்கும், பயணங்களால் காரியங்களைச் சாதிக்கக் கூடியதாக இருக்கும்.

கடகம்: குடும்பத்தில் மகிழ்ச்சி தென்படும், புத்திரர்களால் பாராட்டுண்டு, தொழில் முயற்சிகள் தாமதமாகும், வாக்கு வன்மை காரணமாக பிறரின் புகழைச் சம்பாதிப்பீர்கள், கடிதத் தொடர்புகள் சாதகமான பலனைத்தரும்.

சிங்கம்: பிணி சம்பந்தமாக பொருட் செலவுண்டு, குடும்பத்தில் மனக்கசப்பு அதிகரிக்கும், உறவினர் ஒருவரைப் பகைத்துக் கொள்ளலாம், பணவரவு திருப்திகரமாக இருக்கும், தொழில் துறை மந்தமாக இருக்கும்.

கன்னி: பகைவர்களால் புதிய பிரச்னையொன்று உருவாகும், குடும்பத்தில் அமைதி நிலவும், தொழில் முயற்சிகள் லாபம்தரும், அதிகாரிகளின் தொல்லைகளுக்கு உள்ளாகலாம், மனப் போராட்டம் அதிகரிக்கும்.

துலாம்: எதிர்பாராத செலவுண்டு, குடும்பத்தில் அலைச்சல் மிகுதியாகும், பயணங்களால் காரிய தாமதம் உண்டு, பொதுப்பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் சிரமத்தை எதிர்நோக்குவர், தொழில் முயற்சிகள் தடைப்படும்.

விருச்சிகம்: எதிர்பார்த்த காரியம் நிறைவேறும், பணப் புழக்கம் மனநிறைவு தரும், வீட்டில் சுபகாரியம் நிகழும், தொழிலில் அதிக லாபம் கிட்டும், பிள்ளைகளது உடல்நலம் பாதிக்கும்.

தனுசு. வாழ்க்கையில் மனதுக்கினிய சம்பவம் நிகழும், அந்நிய தேசத்தவர் வருகை தருவர். பொருளாதார உயர்வுண்டு, வேண்டிய ஒருவரைப் பகைத்துக் கொள்வீர், தொழில் லாபமுண்டு.

மகரம்: எதிர்பாராத வெற்றி வாய்ப்புக் கிட்டும். திருமணப் பேச்சுக்கள் நிகழும், தொழிலில் புதிய பங்காளிகள் இணைவர், உல்லாசப் பயணம் உண்டு, குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும், நற்பணிகளில் ஈடுபடுவீர்கள்.

கும்பம்: எதிலும் வெறுப்பு உருவாகும், குடும்பத்தில் கருத்து வேற்றுமை நிலவும், தொழில் மூலமான பிரச்னைகள் தலைதூக்கும், அரச தொழில் செய்வோர் பாதிக்கப்படுவர், பணப்புழக்கம் சுமாராக இருக்கும்.

மீனம்: எண்ணங்களில் புதிய திட்டம் உருவாகும், குடும்பத்தில் அமைதி தன்றும். உறவினர் சம்பந்தமான பிரச்னை தலை தூக்கும், தொழிலில் கஷ்டமுண்டு, அதிகாரிகளின் வெறுப்புக்கு ஆளாக நேரிடும், நீண்டகடன் வசூலாகும்.

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

''இரண்டாயிரம் ஆண்டு சகலருக்கும் சுகாதார வசதி'' என்ற தலைப்பிலான கருத்தரங்கு இம்மாதம் இருபத்ரோம் திகதி காலை யாழ்ப்பாணம் தாதிகள் பயிற்சிக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இக்கருத்தரங்கில், சுகாதாரத் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் கலந்துகொள்ளவர். (12)

## வீதி சீர்கேடு

(பண்டத்தரிப்பு)

சில்லாலை - பண்டத்தர்ப்பு பிரதானவீதி நீண்டகாலமாக திருத்தப்படாது போக்குவரத்திற்கு மிகவும் சீர்கெட்ட நிலையில் உள்ளது. குன்றும் குழியுமாக இருக்கும் இவ்வீதியை திருத்துமாறு சில்லாலையிலுள்ள பொது நல அமைப்புகள் வீதிகள் அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதம பொறியியலாளரிடம் மகஜர் மூலம் கோரிக்கை விடுத்துள்ளன.

## சிவராத்திரி விழா

(பண்டத்தரிப்பு)

கீரிமலை அருள்மிகு ஸ்ரீ நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத்தில் எதிர்வரும் 23 ம் திகதி வெள்ளிக்கிழமை இரவு மகா சிவராத்திரி தினம் சிறப்பாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

அன்று முற்பகலில் ரதோற்சவம் நடைபெறவுள்ளது. இரவு சிவராத்திரியை முன்னிட்டு கீரிமலை சிவநெறிக் கழகத்தினரின் பஜனை, இன்னிசை, பண்ணிசை ஆகிய நிகழ்ச்சிகளும், கதாபிரசங்கமும், நானகு ஜாமப் பூசைகளும் இடம்பெறவுள்ளன. இதற்கான ஒழுங்குகளை ஆலய ஆதீன கர்த்தாவும், சிவாச்சாரியாருமான சிவஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள் செய்துள்ளார்.

## மெய்வல்லுநர் போட்டி

[யாழ்ப்பாணம்]

யாழ், கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 22 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் கல்லூரி மைதான்த்தில் நடைபெறும்.

கல்லூரியின் பழைய மாணவரும் விற்பனைத் திணைக்கள பிராந்திய கணக்காளருமான திரு. க. சண்முகரத்தினம் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார். டாக்டர் (திருமதி) சுமதி சண்முகரத்தினம் பரிசில் வழங்குவார். கல்லூரி அதிபர் திரு. மு. இராமலிங்கம் தலைமையில் இவ்வைபவம் நடைபெறும்.

## வீதிபுனரமைக்க நிதி ஒதுக்கீடு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை - மருதங்கேணி வீதியைத் திருத்திப் புனரமைப்பதற்கென ٤10 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்குப்பகுதி முக்கிய வீதியான பருத்தித்துறை-மருதங்கேணி வீதி தற்போது போக்குவரத்துச் செய்யமுடியாத குன்றுங்குழியுமாக மிகப்பழுதடைந்த வீதியாகக் காணப்படுகிறது. (52)

# மாணவரின் கல்விவளர்ச்சிக்கு விளையாட்டுபோட்டி அவசியம்''

[அச்சுவேலி]

''மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு விளையாட்டுப் போட்டிகள் மிக அவசியம். உடல் உறுதியும், உள்ளத் தெளிவும், தோல்வியை ஏற்று வெற்றிகொள்ளும் மனோதிடமும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்வதன் மூலம் ஏற்படும். எனவே மாணவர்கள் பொறாமை உணர்வு இன்றி போட்டியிட்டு முன்னேற வேண்டும்'' என்று அருட்சகோதரி பிடலிஞ தெரிவித்தார்.

அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் கல்லூரி அதிபர் அருட்சகோதரி எம். கலீஸ்ரா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினூர்.

அருட்சகோதரி பிடலிஞ தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது; ''மாணவர்களின் உடல் உள வளர்ச்சிக்கும், வெற்றிதோல்வியை மதித்து முன்னேறுவதற்கும் மெய்வல்லுநர் போட்டிகள் வழிவகுக்கும். மாணவர்களின் சகல முன்னேற்றத்திற்கும் போட்டி உணர்வு இருக்க வேண்டும். பொறாமை இருக்கக்கூடாது.

பொறாமை உணர்வு இல்லா போட்டிகள் மூலம் தமது சிறப்பாற்றலை மாணவர்கள் வெளிப்படுத்தவேண்டும் இந்த உணர்வை மாணவப் பருவத்தில் வளர்த்துக் கொள்ள வேண்டும்''

போட்டிகளில் ரேஸ் இல்லம் முதலாம் இடத்தையும், டெஸ்சி இல்லம் இரண்டாம் இடத்தையும் [illegible] இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டது. [74]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மாநகர வீதிகளில்

# வாகனங்களே செல்லவேண்டும் மக்கள் நடைபாதையை பாவிக்கலாம்

## யாழ். மாநகரசபையினர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர வீதிகளில் வாகனங்கள் தவிர மக்கள் செல்லக்கூடாதென்றும், மக்கள் நடைபாதைகளை மட்டும் பாவிக்கவேண்டுமென்றும் யாழ். மாநகரசபையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்த வேண்டுகோள் துண்டுப்பிரசுரம் மூலம் விரைவில் வெளியிடப்படவிருக்கிறது.

அந்த வேண்டுகோளில் மேலும் அறிவிக்கப்பட்டிருப்பதாவது:

வீதிகளில் முக்கியமாக பொலித்தீன் போன்ற அழிக்க முடியாத பொருட்களை வீச வேண்டாமென்றும், கழிவுப் பொருட்கள் சேகரிக்கவரும் லொறிகள் வருமுன்பே குப்பைகளை தொட்டிகளில் இட வேண்டும்.

முக்கியமாக வீதியோரங்களிலுள்ள புல் பூண்டுகளை அகற்றி அதை நடைபாதையாக மக்கள்பாவிக்கவேண்டும் எக்காரணம் கொண்டும் வீதிகளில் வாகனங்கள் தவிர மக்கள் செல்லக்கூடாது.

தற்போது இந்திய அமைதி காக்கும் படையினரால் வீதிக்கு நடுவேபோடப்பட்டிருக்கும் தடைவரம்புகள் அகற்றப்பட்டு வருகின்றன. (எஸ்)

### மகளிர் தினத்தில்

# பல முன்னேடித் திட்டங்கள் வகுத்து பணியாற்றுவோம்

(யாழ்ப்பாணம்)


''சர்வதேச மகளிர் தினத்தில், மகளிர் அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டுச் சுதந்திரமான பொருளாதாரச் சமூக கட்டமைப்பை ஏற்படுத்துவதற்குப் பல முன்னேடிச் செயல் திட்டங்களை வகுத்து, எதிர் காலச் சுபீட்சத்திற்குச் சிறந்த பணியாற்றத் திடசங்கற்பம் செய்வோம்.''

இவ்வாறு மகளிர் அபிவிருத்தி நிலையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''மகளிர் அபிவிருத்தி நிலையம் வரும் மார்ச் மாதம் 1ந் திகதி தொடக்கம் 8ம் திகதி வரையுள்ள நாட்களில் சர்வதேச மகளிர் தினம் தொடர்பாகப் பல நிகழ்ச்சியை நடத்துவதற்கு ஒழுங்குகளை மேற்கொண்டுவருகிறது.

இது தொடர்பாகக் கருத்தரங்குகளும், கூட்டங்களும் நடத்தப்படவுள்ளன. மேலும் எமது வெளியீடான 'நங்கை' மார்ச் மாத இதழ் ஒரு சிறப்பிதழாக வெளிவர இருக்கின்றது. இந்நிகழ்ச்சியில் பங்குகொண்டு ஆக்கபூர்வமான கருத்துக்களையும், செயல் திட்டங்களையும் வகுத்து முன்நடத்திச் செல்வதற்குப் பல்வேறு அமைப்புக்களும் ஒன்றுபட்ட மகளிர் ஒத்துழைப்பை வழங்குமாறுகேட்டுக்கொள்கிறோம்.'' (து)



[யாழ். சென். ஜோண் பொஸ்கோ பாடசாலையின் புதிய இரண்டு மாடிக் கட்டிடத்திற்கு யாழ். கல்வித் திணைக்களத்தின் கட்டிடப் பொறியியலாளர் திரு எம். பிரான்சிஸ் நேற்று அடிக்கல் நாட்டுவதையும், கட்டிட ஒப்பந்தக்காரர் திரு. ஏ. ஜெயராசா அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.]


## எமது நேற்றைய புதிய வெளியீடுகள்

(1) பாண்டியராஜன் * ரசிகா * S. S. சந்திரன்

**சின்ன சின்ன ஆசைகள்**

(ஒறிஜினல்)

(2) பிரபு * சீதா * ஜனகராஜ்

**பொண்ணு பாக்க போறேன்**

(ஒறிஜினல்)

**(3) ஏக்நாத்-14** (வீடியோ பத்திரிகை)

*** முக்கிய குறிப்பு:

கொழும்பு - மாஸ்ரர் பிரதிகள் யாழ். நகரில்!

ஆம்... எமது வாடிக்கையாளர்களின் நன்மை கருதி கொழும்பில் எடுக்கும் மாஸ்ரர் பிரதிகளையே இங்கு குறைந்த விலையில் வழங்குகின்றோம்.

மேலதிக விபரங்களுக்கு எம்முடன் நேரடியாக தொடர்புகொள்ளுங்கள்.

## குணம் வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.


### பல்கலைக்கழகத்துக்குக் கூடுதலானோர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் ஒவ்வோர் துறைக்கும் அனுமதிக்கப்படுவோரின் விபரம் வெளியாகியுள்ளது. விவசாய பீடத்திற்கு 26 பேர் தெரிவு செய்ததோடு சகல பீடங்களுக்கும் கூடுதலான மாணவர்கள் இவ்வருடம் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. தெரிவானோர் விபரம் வருமாறு: மருத்துவபீடம் 95, உயிரியல் விஞ்ஞானம் 94, பௌதீக விஞ்ஞானம் 173, வர்த்தகம் 144, கலை 135. (எஸ்)

### சமயச்சொற்பொழிவு

[பருத்தித்துறை]

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார்ஆலயத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமைகள் தோறும் விசேட சமயச் சொற்பொழிவுகளை நிகழ்த்துவதற்கான ஒழுங்குகளை ஆலய தர்ம பரிபாலனசபை மேற்கொண்டுள்ளது.

இன்று 18 ம திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். பல்கலைக்கழக தமிழ்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. எஸ். சிவலிங்கராஜா ஆழ்வார்களும் பாவனையும் பற்றி சொற்பொழிவாற்றவுள்ளார்,

25-ம் திகதி யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறை விரிவுரையாளர் செல்வி இந்திரா சிற்றம்பலம் 'ஆழ்வார்கள் கண்ட இராமன் பற்றி சொற்பொழிவாற்றுவாரெனவும் ஆலய தர்ம பரிபாலனசபை அறிவித்துள்ளது. (52)

### பரு. கொழும்பு இரவு பஸ் சேவை

(புலோலி)

பருத்தித் துறையிலிருந்து கொழும்புக்கான இரவு பஸ் சேவையாக வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போ அண்மையில் ஆரம்பித்துள்ளது.

இதுவரை காலமும் பகல் சேவையாக நடத்தப்பட்டு வந்த இச்சேவை இரவுசேவையாக மாற்றப்பட்டதைத் தொடர்ந்து தினமும் பருத்தித்துறையிலிருந்து கொழும்புக்கான பஸ்சேவை பிற்பகல் 5 மணிக்கு பருத்தித்துறையில் இருந்துநடத்தப்பட்டுவருகிறது

இதேவேளையில் பருத்தித் துறை-கொழும்பு தனியார் பஸ் சேவைகள் இரவும் பகலும் நடைபெற்றுவருகின்றன. (61)

### முல்லை மாவட்டம்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

யும், 10.060 ஏக்கர் நெற்செய்கைக் காணி விஸ்தீரணத்தையும் கொண்டுள்ளது. இப்புதிய உதவி அரசாங்க [illegible] ள்ளார். (150)


## வேலைக்கு ஆட்கள் தேவை

(1) அனுபவம்வாய்ந்த சமையல்காரர். சம்பளம்: ரூபா 2000-00 மேல் வழங்கப்படும்.

(2) பாதுகாப்பு உத்தியோகஸ்தர் (Security Guards) 40—45 வயதுக்கிடைப்பட்டவராகவும், வாகனம் செலுத்தக்கூடிய தகுதியுடையவராகவும் இருக்க வேண்டும்.

(3) தோட்ட வேலையாட்கள் (Gardeners) குறைந்தது ஐந்து வருட அனுபவம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

(4) கோழிப்பண்ணையில் கடமையாற்றக்கூடிய கூலியாட்கள் குடும்பப்பொறுப்பற்ற தனியாட்கள் விரும்பத்தக்கது.

**இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணி முதல் 11-00 மணிவரை நேரில் வரவும்**

எமது ஸ்தாபனம் பொதுமக்கள் சேவைக்காக காலை 9-00 மணி முதல் இரவு 10-00 மணிவரை திறந்திருக்கும்.

# OLD PARK
## CHINESE RESTAUARANT

207, OLD PARK ROAD,
Chundikuli, Jaffna.

(சி 539]


இறையன்பில் இணைந்த

## 6-ம் மாத நினைவஞ்சலி



## முருகேசு இராசம்மா

(யாழ்ப்பாணம் பிரபல வர்த்தகர் S. V. முருகேசு அவர்களின் அன்பு மனைவி)

தோற்றம்: 10-3-1925 மறைவு: 21-8-1989

நினையாத நேரம் அணைந்த எம் ஒளி விளக்கே.
நினைக்காத நேரமும் இல்லை உமையே
ஆறு மாதம் அழிந்தாலும்
நூறு ஆண்டு சென்றாலும் மாறாது எம் துயரம்
மரணம் நிச்சயமே மறக்கத்தான் முடியாதே.
இதயங்கள் வெடிக்குதம்மா
வேதனையால் வாடுகின்றோம்
வெந்து மனம் ஏங்குகின்றோம்
இப்பிறப்பில் உம் நினைவை
எப்படித்தான் மறப்போம்

உமது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல காரைநகர் திக்கரை முருகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

உம் பிரிவால் வாடும்:

அன்புக்கணவர் S. V. முருகேசு, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

முருகன் இல்லம்,
விளானை, களபூமி,
காரைநகர்.

(சி 2861)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

"லக்ஸ்பிறே உற்பத்தி நிறுவனமான லங்கா மில்க்புட் லிமிட் டட பிராந்திய விற்பனை முகவர்களுக்கு ஒழுங்கு செய்த ஒன்றுகூடல் வைபவம் யாழ்ப்பாணம் ஹோட்டல் ஞானம்ஸ் உல்லாச விடுதியில் நேற்று காலை நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படம் இது. படத்தில் பிராந்திய முகாமையாளர் கே. ராமகிருஷ்ணன் உரையாற்றுவதையும், சிறப்பு




விருந்தினராக கலந்து கொண்ட பேராசிரியர் வைத்திய கலாநிதி கே. நாகேந்திரன் அருகில் அமர்ந்திருப்பதையும் காண்க.

யாழ் மாவட்ட

# பாடசாலைகள் விரைவில் இரு நேரமாக்கப்படும்

## — யாழ் கல்விப் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட பாடசாலைகள் விரைவில் இரண்டு நேரப் பாடசாலைகளாக நடைபெறவும், மாணவர்களுக்கு போஷாக்குள்ள உணவு மதிய உணவாக வழங்கவும் யாழ் பிராந்திய திணைக்கள கல்வித் திணைக்களம் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

இவ்வாறு யாழ்ப்பாணப் பிராந்திய உதவி கல்விப்பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பி யாழ்பாண மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

நேற்று நண்பகல் நடைபெற்ற இவ்வைபவத்திற்கு கல்லூரியின் அதிபர் திரு. வே பாலசுந்தரம் தலைமை தாங்கினார்.

செல்வி திலகவதி பெரியதம்பி தொடர்ந்தும் உரையாற்றுகையில் யாழ்ப்பாண மத்திய கல்லூரி மாணவர் அனுமதி குறித்து திணைக்களம் ஒரு சமூக நீதியுடன் செயல்பட்டு வருகின்றது என்றார்.

அமைதிப்படை வெளியேற்றம்: தமிழரைப் பாதுகாக்க

## சிறிலங்கா அரசு தவறுமானால்

# இந்தியா கடும் முடிவு எடுக்கும்

(புதுடில்லி)

இலங்கையிலிருந்து அமைதிப் படையினர் விலகிய பின்னர் சிறிலங்கா அரசு தமிழர்களின் பாதுகாப்பிற்கு உத்தரவாதமளிக்கத் தவறுமானால் அது குறித்து இந்தியா கடுமையான முடிவு எடுக்கும் என்று எச்சரிக்கை செய்துள்ளது.

இந்திய வெளியுறவு அமைச்சக அதிகாரபூர்வமான அதிகாரி ஒருவர் புதுடில்லியில் இத்தகவலைத் தெரிவித்தார்.

''இலங்கைத் தமிழர்களின் பாதுகாப்புகுறித்து கொழும்பு எவ்வித அக்கறையுமின்றி இருப்பதனை இந்தியா கடுமையான விடயமாகக் கருதுகிறது'' என்றும் தெரிவித்த அந்த அதிகாரி மேலும் கூறியதாவது: இலங்கை அரசாங்கத்தைக் குலைப்பதற்கு இந்திய புலனாய்வுத் துறையான 'றோ' முயற்சிப்பதாக வெளியுறவு பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு. ரஞ்சன் சுமத்திய குற்றச்சாட்டு அர்த்தமற்றது

இலங்கையில் அவசரகால நிலைமை நீக்கப்பட்டது அந்தக் குற்றச்சாட்டு அர்த்தமற்றதற்கு சான்றாகும்.

ஒருவேளை கூட்டம் கூட்டமாக அகதிகள் வெளியேறக் கூடும் என்பதற்காக தங்களைக் குற்றமற்றவர்களாகக்காட்டிக் கொள்ள இலங்கை ஆட்சியாளர்கள் முனைகிறார்களோ என்னவோ தெரியாது (து)

யாழ். மாவட்டத்தில்

# வீடுகளைக்கட்ட கடன்களை வழங்க நடவடிக்கை

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்தில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை நிதிக் கூட்டுத்தாபனம் வீடுகட்டுவதற்கு கடன்களை வழங்க நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இக்கடன்களை வழங்குவதற்கான விண்ணப்பப்படிவங்கள் யாழ்ப்பாணம் 3ம் குறுக்குத் தெருவிலுள்ள தேசிய வீடமைப்பு அதிகார அபிவிருத்திச்சபைச்காரியாலயத்தில் வழங்கப்பட்டுவருகின்றன.

இக்கடன்கள் ஐயாயிரம் ரூபாவுக்குக் குறைந்த வருமானம் உடையவர்களுக்கு ஐம்பதாயிரம் ரூபாவும், அதற்கு கூடிய வருமானம் உடையவர்களுக்கு ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளன. இக்கடன்களுக்கு ஆறுசத வீத வட்டியும் பதினைந்து வருட காலத்தில் செலுத்தக் கூடியதாகவும் வழங்கப்பட்டு வருகின்றது. கடன்களைப் பெறுவதற்கு சொத்தை அடமானமாகக் கொடுக்கவேண்டும்.

இக்கடனைப் பெறுவதற்கு இதுவரை எவரும் விண்ணப்பத்தைப் பெறவில்லையென அதிகாரிகள் 'ஈழநாடு'வுக்குத் தெரிவித்தனர். இக் கடன் வீடுகளைத் திருத்துவதற்கோ அல்லது இடிந்த வீடுகளுக்கு புதிய வீடுகளைக் கட்டுவதற்கோ வழங்கப்படுகிறது. (21)

கொழும்பில் ஆயுதங்கள் கண்டுபிடிப்பு:

# 'றோ' தொடர்பிருக்கலாமென சந்தேகம்

## தீவிர விசாரணைக்கு உத்தரவு

(கொழும்பு)

கொழும்பில் பல பகுதிகளிலிருந்து பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக புலனாய்வுத் துறையினர் தெரிவித்துள்ளனர். இந்த ஆயுதங்களை தமிழ் குழுக்களே கொழும்பிற்கு கொண்டு வந்திருக்கலாமெனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில் ரஷ்ய தயாரிப்பான ஏ. கே. 47 துப்பாக்கிகளும் அடங்குமென்றும் ஆயுதங்களில் சில தொகுதியை தமிழ் தேசிய இராணுவம் கொழும்பிற்கு கொண்டுவந்திருக்கலாமென தாம் எண்ணுவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த ஆயுதக்கடத்தலுக்கும் 'றோ'விற்கும் தொடர்பு இருக்கலாமென்றும் இது குறித்து தீவிரவிசாரணை நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

### நெதர்லாந்தில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இது இவ்வாறிருக்க வடக்கு ஹொலந்து நகரமாகிய டென் கால்டனின் 'சி' தர வசிக்கும் அனுமதி வழங்கப்பட்ட இலங்கைத் தமிழ் அகதிகளிடமிருந்து ஏற்கனவே வழங்கப்பட்ட அனுமதிகளை பொலிசார் வாபஸ் பெற்று வருகிறார்கள்,

இந்த நெருக்கடி நிலையினால் நெதர்லாந்தில் இருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகள் வேறு ஐரோப்பிய நாடுகளுக்கு செல்ல ஆரம்பித்துள்ளனர்.

நெதர்லாந்தில இருந்து வெளியேறும் தமிழர்களில் பலர் சுவிற்சலாந்து சென்றுள்ளதாகவும் அறியப்படுகின்றது. (து)

### இலங்கை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குதலினால் இரு இலங்கைத் தமிழ் சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் பலர் காயமடைந்துள்ளனர். இவர்களின் வீடுகளும் சேதமடைந்துள்ளன.

துருக்கியர் ஒருவரும் வீதியில்வைத்து இந்த இயக்கத்தினரால் அடித்துக்கொல்லப்பட்டுள்ளார்.

இங்குள்ள பிறநாட்டு அகதிகளுக்கு பாதுகாப்பளிக்கமுடியாத நிலையில் சுவிஸ் அரசாங்கம் இருப்பதால் அவர்களை சொந்த நாடுகளுக்கு திருப்பி அனுப்புவதைத் தவிர வேறு வழியில்லை என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (து)

### திருமலையிலிருந்து

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லிருந்து அமைதிப் படையினர் படிப்படியாக வெளியேறிவருவதாகவும், அதேவேளையில் நகர்ப்புறங்களில் உள்ள அமைதிப் படையினர் வெளியேறுவதற்கான சகல ஆயத்தங்களையும் செய்துவருவதாகவும் தெரிகிறது.

கடந்த சில வாரங்களாக திருமலைப்பகுதி வெறிச்சோடிக் கிடப்பதுடன் மாலை 6 மணியுடன் நகரில் சன நடமாட்டம் முற்றாக அற்றுப்போய் விடுகிறது. (வி)

### கருணாநிதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெறும், இதையடுத்து இப் பேச்சுக்களின் சகல விபரங்களையும் திரு. முரசொலி மாறன் பிரதமர் திரு. சிங்கிற்கு நாளை அல்லது நாளை மறுதினம் விளக்கிக்கூறுவார்.

விடுதலைப் புலிகளுடன் நேற்று இரண்டாம் தடவையாக பேச்சுக்கள் நடாத்திய திரு. கருணாநிதி இது குறித்து தெரிவிக்கையில், ஜனநாயக' பாதைக்கு திரும்ப 'புலிகள்' தயாராயிருப்பதாகவும் ஆனால் இதற்கு இடையூறாகஉள்ள சில சிக்கல்கள் தீர்க்கப்படவேண்டுமென அந்த இயக்கப்பிரதிநிதிகள் கேட்டுள்ளனர். இப்பேச்சுக்கள் இரு தரப்பிற்கும் மனநிறைவைத் தந்தது என்றார்

இதையடுத்து திரு. கருணாநிதி விடுத்த வேண்டுகோள் ஒன்றில், தமிழர் பிரச்னைக்கு நல்ல தீர்வொன்றை காணும் நிலை தற்போது உருவாகியுள்ளது. இதற்கு குந்தகம் விளைவிக்கும் விதத்தில் எந்தத் தரப்பும் நடந்து கொள்ளக் கூடாது. பிரச்னையை சுமுகமாகத் தீர்க்க அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டுமென ... (வி)

### கருத்தரங்கு

[திருமலை]

பாடசாலை ஆசிரியர்களுக்கு பாடபோதனை சம்பந்தமான கருத்தரங்கு ஒன்று திருமலை ஸ்ரீ சண்முக வித்தியாலய மண்டபத்தில் இன்று ஞாயிறு நடைபெறும்.

பிரதம விருந்தினராக கலந்து கொள்ளும் திருமலை மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. க. தியாகராஜா இக் கருத்தரங்கினை ஆரம்பித்து வைப்பார்.

### 2000 ரூபா மட்டும் பெறலாம்!

(பருத்தித்துறை)

பருத்தித்துறை இலங்கை வங்கியில் வாடிக்கையாளர்களுக்கு 2,000 ரூபா வரையுமே பணம் வழங்கப்பட்டு வருகிறது. 2,000 ரூபாவுக்கு மேலான பணத்தொகையைப் பெறவிரும்பும் வாடிக்கையாளர்கள் பருத்தித்துறை இலங்கை வங்கியின் நம்பர் பெற்று யாழ்ப்பாணம் சென்று இலங்கை வங்கியின் ஆஸ்பத்திரி வீதிக் கிளையிலேயே பெற வேண்டியுள்ளது.

இதனால் வங்கி வாடிக்கையாளர்கள் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர். இவ்வங்கி வாடிக்கையாளர்களின் சிரமங்களை நீக்க இலங்கை வங்கி நிர்வாகம் நடிவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (52)

### கைதான

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சிப் பகுதியிலிருந்து இந்திய அமைதிப் படையினர் வாபஸ் ஆவதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (52)

### ஸ்ரீ ராமகிருஷ்ணரின் நினைவு தினம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் 155 வது நினைவு தினம் எதிர்வரும் 27ம் திகதி நடைபெறுமென சேவாச்சிரமத் தலைவர் சுவாமி சித்ரூபானந்தா தெரிவித்துள்ளார். (52)

### வேலைவாய்ப்பு வழங்க ஏற்பாடு

[திருமலை]

தொழிலற்ற பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் நடவடிக்கையை வடக்கு கிழக்கு மாகாணசபை மேற்கொண்டுள்ளது என்று மாகாணசபை பிரதம செயலாளர் திரு. வே. ந. சிவராஜா தெரிவித்தார்.

இதன்படி ஏற்கனவே நடைபெற்ற நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றிய அனைவருக்கும் மார்ச் முதலாம் திகதி நியமனம் வழங்கும் கடிதங்கள் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

இதேவேளை நேர்முகப் பரீட்சைக்கு தோற்றத் தவறியோரும் எதிர்வரும் 5-ம் திகதி திருமலை உள்துறை அமைச்சில் சமுகமளிக்கவேண்டும்எனக் கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை திருமலை மாவட்டத்தில் பயிலுநர் ஆசிரியர் திட்டத்தின் கீழ் 870 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மார்ச் மாதம் முதலாம் திகதி இவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டு 4 வருட பயிற்சியின் பின் நிரந்தர ஆசிரியசேவையில் அமர்த்தப்படுவர்.

## மரண அறிவித்தல்

### தாமு - சரவணமுத்து

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த தாமு - சரவணமுத்து 17 - 02 - 90 சனிக்கிழமை காலமானார். அன்னார் அன்னம்மாவின் அன்புக் கணவரும் செல்லத்துரை (மக்கள் வங்கி வவுனியா), கதிர்காமத்தம்பி (பளை மதுபான சாலை உரிமையாளர்), சற்குணசிங்கம் (Holland), பாலசுந்தரேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திரவதனு, இந்திராணி (அன்ரோ மதுபானசாலை உரிமையாளர், றக்கா றோட்), குஞ்சு, ஆறுமுகம் (K. K. S Cement Corp.) ஆகியோரின் அன்பு மாமனாரும் தயாளன், தயாநிதி, தர்சன், தயாரூபன், நிசாளினி, லோகேஸ்வரன், சஜீவன், றஜீவன், அபர்ணா, இனியா, தனஞ்சேனன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற வைரமுத்து, தம்பையா, பொன்னம்பலம் ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற இராசாவின் மைத்துனரும் ஆவார். அன்னாரது இறுதிக் கிரியைகள் 18 - 02 - 90 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 3 மணியளவில் அளவெட்டியில் நடைபெறும்.

தகவல்: சே. வேல்முருகன்

(சி 2862)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு மாசி மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003e6/81. Eelanadu P. O. Box No. 49. Telegram: Eelanadu. Telephone: 2291,

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org